www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்



மாவீரர்நாள் நவம்பர் 27

கார்த்திகை 1994


# வெளிச்சம்

விடுதலைப்புலிகள் கலை,பண்பாட்டுக்கழகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கார்த்திகை மாதம்.
வானம் கிழிந்து
எந்தநேரமும் மழைவரலாம்.
ஈரநிலம்.
மயிர்க்கணுக்கள் சில்லிட்டுப் போக
குளிர்ந்த காற்று சுகம் கேட்கிறது.
நள்ளிரவு.
நேற்று இறக்க, இன்று பிறக்கும்.
கணக்குப் பிசகாத பன்னிரண்டுமணி.
கோபுரத்து மணிகளின் நாத அஞ்சலி.
நெஞ்சத்து நெருப்பு நெய்விளக்கில் பற்றி
எரியத் தொடங்க
ஒரு பாட்டுக் கேட்கிறது.
''தாயகக்கனவுடன் சாவினைத்தழுவிய
சந்தனப் பேழைகளே — இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா
குழியினுள் வாழ்பவரே''
மகளே!
மகனே!
கல்லறையில் தூங்கும் கண்மணிகாள்
கண்திறந்து பாருங்கள்.
இலக்கு தூரத்தேதான் இருக்கிறது.
என்றாலும்,
பாதை தவறாத பயணம் தொடரும்.
எவருடனாவது கைகுலுக்கி
பேச்சுவார்த்தை மேசைக்குப்போகும்போது
உங்கள் முகங்களே கண்களில் தெரியும்.
இது உறுதி.
அமைதியாகத் தூங்குங்கள்.



— மாலிகா —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிச்சம்

கார்த்திகை 1994

இதழ் - 31

விலை: 20/-

மாவீரர்நாள் தமிழீழத்தில் மட்டுமல்ல, தமிழர்கள் பரந்துவாழும் இந்தப்பூமிப்பந்தில் தொட்டுக்காட்டக்கூடிய இடங்களிலெல்லாம் இன்று கொண்டாடப்படும் கோபுர தரிசன நாளாகிவிட்டது.

தமிழர்களுக்கு இந்தநாளே தலையான நாளாகிவிட்டது. தமிழர்கள் மதங்களால் கூறுகளாகி, அம்மதங்களின் திருவிழாக்களோ பலவாகி, அவைகளே பண்பாட்டின் விழாக்களென்றாகி, மதவிழாக்களையே தமிழர் திருநாட்கள் என்று மயங்கி நின்ற வேளையில், தமிழர்கள் பேதங்களை மறந்து எல்லோரும் ஒரு நேர்கோட்டில் வருடமொரு முறை சந்தித்துக்கொள்ளும் நாள் மாவீரர் நாள் என்றாகிவிட்டது.

மாவீரர்கள் யாரென்பது இன்று எல்லோருக்கும் தெரியும். அவர்களின் கனவுகள் என்னவென்பதும், கல்லறைக்குள் அவர்கள் கண் மூடித் துயில்வது ஏனென்பதும் அனைவரும் அறிவர். எல்லாவற்றுக்கும் மேலாகத் தங்களின் எலும்புக்கூடுகள் மக்கி மண்ணாகுமுன்னர் இந்தமண் விடுதலைபெறும் என்ற பெரும் நம்பிக்கையுடன் அவர்கள் போனார்கள் என்பதும் எல்லோருக்கும் நன்கு தெரியும்.

தமிழீழம் அவர்களது தாரகமந்திரம். சந்ததிக்கான வாழ்வொன்றே அவர்களது கனவு. கட்டற்ற விடுதலையொன்றே அவர்களின் எதிர்பார்ப்பு.

இளமைச் சுகங்களை வீசிவிட்டு அந்த அரும்புகள் எரிந்துபோயின. வண்ண, வண்ணக் கனவுகளை எறிந்துவிட்டு இந்த மண்ணின் கனவுகளுக்கு அவர்கள் ஆடைகட்டி அழகுபார்த்தனர். இலட்சிய நெருப்பே அவர்களின் நெஞ்சத்தில் அவியாது கனன்று கொண்டிருந்தது.

வீரமும் மானமுமே அவர்களின் நரம்புகளில் நர்த்தனமிட்டன. அவர்கள் தாயகத்தைக் காதலித்தவர்கள். மக்களை உயிருக்குயிராக நேசித்தவர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் தலைவனை உளமார ஏற்றும், அவரிட்ட கட்டளையை அசையாத நம்பிக்கையுடன் சிரமேற்கொண்டும் களமாடிய புலிகள்.

மாவீரர்நாள் விதையுண்ட வீரர்களின் நினைவுநாள் மட்டுமல்ல. இது திதிபார்த்துச் செய்யும் பிதுர்க்கடனான திவசநாளுமல்ல. உயி

www.tamilarangam.net

ரோடு வாழும் தமிழர்கள் 'மாரீசங்களில்', ஒப்பனைகளின் பொய்ம்மை அழகில் மயங்கிப் போகாது, இறுதிவரை உறுதி தளரோம் என்று சபதமேற்கும் நாளுமாகிவிட்டது.

மனிதன் உலகில் வாழும் நாட்களிலேயே அடிக்கடி புதிது, புதிதாகப் பிறக்கிறான். நேற்று நடந்ததை இன்றும், இன்று நடப்பதை நாளையும் மறந்து ஏதோ வாழ்ந்துவிட்டு ''ஊன்கழித்து மகிழ்ந்தோம்'' என்றளவில் திருப்தி அடைகின்றான். ''வந்தளவுக்கு லாபம்'' என்று கிடைத்ததுடன் நிறைவடைந்து, வளைந்து கொடுத்து வாழ நினைக்கின்றான். சுதந்திரத்தின் சுகம் தெரியாது சும்மா கிடக்கிறான். விடுதலையில் இருந்து ஒரு குண்டு மணியளவேனும் குறைய விடமாட்டோம் என்று குரல் கொடுக்க மறந்துபோய் விடுகின்றான். இவற்றையெல்லாம் நினைவுபடுத்தவுமே மாவீரர்நாள் வருகிறது.

நள்ளிரவில் நாதமணி ஒலிப்பதும், நெய்விளக்கேற்றி நெக்குருகுவதும் சம்பிரதாயச் சடங்குகளாகக் கூடாது. இந்த வருடம் மாவீரர் நாள் மீண்டும் ஈழத்தமிழர்களெல்லாம் ''தமிழீழத் தாயகமே'' எங்கள் தாரக மந்திரமென்று உறுதி எடுக்கவேண்டிய காலகட்டத்தில் வருகிறது.

எல்லோரும் சென்று கல்லறைகளில் சபதமெடுப்போம். ''உங்கள் கனவுகளை நாங்கள் நனவாக்குவோம்'' என்று உறுதிமொழி எடுப்போம்.

செல்லும் வழியில் எங்களை எந்தச் சலுகை ஆசைகளும் ஆட்கொள்ள இடமளியோம் என்று சத்தியம் செய்வோம்.

மாவீரராக மடிவதே மகிமை என்று நாளும் நாளும் நம்புவோம். எல்லோரும் வாருங்கள். கைகளில் மலரேந்தி அந்தக் கல்லறைகளுக்குச் செல்வோம். வெளிச்சம் அங்கிருந்துதான் பரவுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'போரியல்' புதிதாய்க் காணும் புலிகளின் தலைவன் வாழி!



புதுவை இரத்தினதுரை

கார்த்திகை மாதம் பூத்த
கற்பகப் பூவே! சொல்லும்
வார்த்தைகள் தோற்றுப் போகும்
வல்லமை நிமிர்வே! இன்று
நாற்பது அகவை காணும்
நாயகா! தமிழன் மீண்டும்
போர்த்திறன் பெறச் செய்தாயே
போதும், பல்லாண்டு வாழி!

□

சூரியத் தேவாய் நின்று
சுடரும்எம் திருவே! உந்தன்
வேரிருந் தெழுந்த வீர
விழுதுகள் உலகை வெல்லும்.
"போரியல்" புதிதாய் காணும்
புலிகளின் தலைவா! உன்னால்
காரிருள் கலைந்து இங்கே
காலைவந் துதித்த தய்யா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈயடிப் பதற்கும் கையை
எடுத்தறி யாத சாதி
பேயெனப் பயந்து 'பெய்யப்'
பின்புறம் போகா திங்கு
நீவரும் மட்டும் தூங்கி
நின்றது; தலைவா! உந்தன்
தாய்தவம் செய்தாள், எங்கள்
தமிழ்நிலம் நிமிர்ந்த தய்யா.

□

நீட்டிய கையில் வந்து
நீலவான் பணியும், கண்கள்
காட்டிய வழியில் நூறு
கரும்புலி பாயும், எம்மைப்
பூட்டிய விலங்கு யாவும்
பொடிப்பொடி ஆகும், வீரம்
முட்டிய காற்றே! இன்னும்
மூன்றுநூற் றாண்டு வாழ்க.

□



தம்பி! உன்காலத் துள்ளே
தாயகம் மலரும், அந்தச்
செந்தமிழ் ஈழம் வையத்
திசையெலாம் பரவும், இங்கே
பொங்கிடும் புலிகள் சேனை
போரெலாம் வெல்லும், எங்கும்
மங்களம் தங்கும், இந்த
மண்நிமிர்ந் துன்னை வாழ்த்தும்.

26.11.1994 அன்று நாற்பதாவது அகவை காணும் எங்கள் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கட்கு பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

— வெளிச்சம்

www.tamilarangam.net




# எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கும் மாவீரர்கள்

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!
இன்று மாவீரர் தினம்.

எமது விடுதலைப் போராட்டத்தை ஒப்பற்ற வீரகாவியமாக உலக வரலாற்றில் பொறித்துச் சென்ற உன்னதமானவர்களை நாம் நினைவில் நிறுத்திப் பூசிக்கும் புனித நாள்.

மாவீரர்கள் மகத்தான இலட்சிய வாதிகள். தாம் தழுவிக் கொண்ட இலட்சியத்தை தமது உயிரிலும் மேலாக நேசித்தவர்கள். மக்களின் விடுதலையை தமது மானசீக இலட்சியமாக, வாழ்வின் உயரிய குறிக்கோளாக வரித்துக் கொண்டவர்கள் அந்த; இலட்சியத்திற்காகவே மடிந்தவர்கள்.



தமிழீழத் தேசியத் தலைவர்
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

மனித வாழ்வில் சுதந்திரம் உன்னதமானது; மனித நற்பண்புகளில் தலை சிறந்தது. மனித வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமானது. சுதந்திரம்தான் மனித வாழ்விற்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது; முழுமையைக் கொடுக்கிறது.

மனித ஆன்மாவின் ஆழமான அபிலாசையாகவே மனிதனிடம் சுதந்திர தாகம் பிறக்கிறது.

நாகரீகம் தோன்றிய காலந்தொட்டு, யுகம் யுகமாக மனித குலம் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறது. அடிமைத் தளைகளிலிருந்து, அடக்கு முறையிலிருந்து விடுதலை பெற விழைந்து வருகிறது. காலம் காலமாக இந்தப் பூமியில் நிகழ்ந்த போராட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டங்கள், புரட்சிகள், யுத்தங்கள் எல்லாம் மனித விடுதலை எழுச்சியின் வெளிப்பாடு களன்றி வேறென்றுமல்ல.

மனிதனை மனிதன் அடிமை கொள்கிறான்; அழிக்க முயல்கிறான். மனிதனை மனிதன் சுரண்டி வாழ்கிறான். அன்று தொட்டு இன்று வரை மனிதனே மனிதனின் முதன்மையான எதிரியாக விளங்கி வருகிறான். ஒருவனது சுதந்திரத்தை இன்னொருவன் விழுங்கி விட எத்தனிக்கும்போது தர்மம் செத்துவிடுகிறது. உலகில் அதர்மமும், அநீதியும் பிறக்கிறது. சாதி என்றும், வர்க்கம் என்றும், இனம் என்றும் பிளவுகள் எழுந்து மனிதரிடையே முரண்பாடு தோன்றுகிறது. மோதல்கள் வெடிக்கிறது. இந்த உலகில் அநீதியும் அடிமைத் தனமும் இருக்கும்வரை சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும் வரை, விடுதலைப் போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி. ஏனெனில் சுதந்திர எழுச்சியின் உந்துதலால் தான் மனித வரலாற்றுச் சக்கரமும் சுழல்கிறது.

ஒடுக்கப்படும் உலக மக்களில் ஒரு பிரிவினராக நாமும் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறோம். எல்லா விடுதலைப் போராட்டங்களையும் விட எமது போர்க்குரல் இன்று உலக அங்கில் மிகப் பெரிதாக ஒலிக்கிறது. எமது சுதந்திரப் போர் ஏனைய விடுதலைப் போராட்டங்களை விட சாராம்சத்தில் வித்தியாசமானது; தனக்கே உரித்தான தனித்துவத்தைக் கொண்டது; ஒப்பற்ற சிறப்பம்சங்களைக் கொண்டது.

உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும், அதிசயமான அர்ப்பணிப்புக்களும் இங்கு, எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கிறது. சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப் பற்றிற்கும் எமது மாவீரருக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன். இப்படியான நெருமகிமையும், மேன்மையும் வாய்ந்த ஒரு மகத்தான வீரகாவியத்தை எமது மாவீரர்கள் படைத்துச் சென்றிருக்கிறார்கள். எமது மாவீரர்களின் இந்த ஒப்பற்ற சாதனைகளால் ஒடுக்கப்படும் உலகிற்கு எமது போராட்டம் ஒரு உந்து சக்தியாக, ஒரு முன்னுதாரணமாக, ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கிறது. சாவுக்கு அஞ்சாத அவர்களது துணிவும் உறுதிப்பாடுமே எமது போராட்டத்தின் பலமும் வளமுமாகும். எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும், பணத்தையும் வாரி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கைநீட்டி நிற்கவில்லை. எவரிடமும் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்தமண்ணில், எமது சொந்த மக்களில், எமது சொந்தக் கால்களில் தங்கி நிற்கிறோம். எமது சொந்தக்கைகளால் போராடுகிறோம். இதுவே எமது தனித்துவத்தின் தனிச்சிறப்பாகும். எமது சொந்தப் பலத்தில், நாம் வேருன்றி நிலையாக நிற்பதால் மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்துகொடாமல் எம்மால் தலை நிமிர்ந்து நிற்கமுடிகிறது.

புதிய சவால்களும், புதிய நெருக்கடிகளும் நிறைந்ததாக இன்று எமது தேசிய விடுதலைப் போராட்டம் மிகவும் சிக்கலான வரலாற்றுச் சூழ்நிலையை எதிர் கொண்டு நிற்கிறது.

27.11.1992 அன்று மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையின் ஒரு பகுதியை இங்குதருகிறோம்.

www.tamilarangam.net



# மாவீரர் பாடல்

**புதுவை இரத்தினதுரை**

## உறுதிமொழி

மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி.
வழிகாட்டி, எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழி மூடி இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம், தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

## பாடல்

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே!- இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் - அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே
நாமுமை வணங்குகின்றோம் - உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது - எங்கள்
தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

(எங்கே, எங்கே )

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது 'தமிழீழம்' - அதை
நிரை நிரையாகவே நின்றினி, விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியர(சு) என்றிடுவோம் - எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம், உங்களின்
நினைவுடன் வென்றிவோம்.

(எங்கே, எங்கே...)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கரை அருகில்

வசந்தன்

காற்று சற்று உரத்து அவனை தடவி விலகிச் சென்றது மீண்டும் தடவி, விலகி... உடல் சில்லிட்டு குற்றியது. இருள்; சூனியத்தில் எதையோ தேடினான். கடல் அசையாது செத்துக் கிடந்தது; வழமையாக மிதக்கும் உடல்களைப் போல்.

காதில் செருகி இருந்த குறைபீடியை எடுத்து பற்ற வைத்தான். குளிருக்கு சுகமாக இருந்தது. வாய் கசகசத்தது; காறாப்பி துப்பினான்.

'நாளைக்கு வீட்ட போவேணும், வந்து அஞ்சாறு நாளாச்சு, அங்க அவளும் பிள்ளையளும் திண்டிச்சுதுகளோ குடிச்சுதுகளோ' நினைவு எழுந்து நெஞ்சை அழுத்தியது; ஒரு பேய் போல, மனிதனை கொல்கிற மாதிரி...

கடலை உற்றுப் பார்த்தான்; தொலைவு வரை எதுவும் இல்லை. மூன்று நாட்களாக தொழிலில்லை. காற்று சுழற்றி அடிக்கிறது. கடலடி. படகுகாரர் ஒருவரும் கடலில் இறங்கவில்லை. இந்த இலட்சணத்தில் என்னத்தை ஏற்றி இறக்கிறது.

இன்று தான், கடல் அமைதியானது. இரண்டு பட்டி மாடுகள், முப்பது நாற்பது வரும். ஒருமாதிரி விழுத்தி, கட்டி ஏற்றி அனுப்பும்வரை போதும் போதும் என்றாகிவிட்டது. இனி மறுகரையில இருந்து வாறதை இறக்கவேண்டும்.

வீட்டில இருந்து புறப்படேக்கை அவள் வாசல் வரை வந்தாள். கடைக்குட்டி இடுப்பில் இருந்தான்; நிர்வாணமாக.

'அவன் எப்பவும் வடிவு தான்; எப்படி இருந்தாலும்' இயலாமைக்கு மனம் நியாயம் கற்பித்தது.

ஊரில வசதிதான், எல்லாத்தையும் விட்டுட்டு ஓடி வரும்வரைக்கும் நிம்மதியான வாழ்வு; இப்ப கையில காசுக்கு வழியில்லை. கடற்கரையில சேறோடும், சகதியோடும், ஆட்டோடும், மாட்டோடும் போராட்டம். வாழவேண்டும் வேறுவழியில்லை.

காற்றில் வாடை, மூக்கைத் துளைத்து நெஞ்சுக்குள் இறங்கியது. துர்வாடை; ஆடோ, மாடோ செத்திருக்கலாம்; கரையில எங்கயாவது, இல்லை எனில் சற்றுத்தள்ளி உள்ள தீவில... ஒருவேளை மனிதராககூட இருக்கலாம்.

கடற்கரை மண் இலகுவானது; தோண்டுவதற்கும் புதைப்பதற்கும், அவனே நிறையத்தடவைகள் அதனை செய்திருக்கின்றான். கையில்லாமல், காலில்லாமல், தலையில்லாமல், மனிதர்கள்... அடிக்கடி அக்கடலில் மானுடம் செத்து மிதந்தது.

மனிதர்கள் அழிய அழிய மீண்டும் பயணித்தார்கள். தேவை; வாழ்வதற்கான தேவை. அவன் இந்தக்கடற்கரையில் காத்திருப்பது போல, அதுவும் ஓர் தேவை.

நினைவுகளுக்குள் ஆழ்ந்து போனான். கடலில் திடீரென இருள் கிழித்து ஒளிக்கோடுகள்; நெருப்புத் தணல்களின் சரமாரியான பாய்ச்சல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நெஞ்சு திகைத்து உள்ளம் நடுங்கியது. தாமதித்த வெடியோசைகள் காதில் மோதின.

'மாதாவே, நாசமறுவாங்கள் தொடங்கிட்டாங்கள், இண்டைக்கு ஆரோ எந்தச் சனமோ, தாயே காப்பாத்தம்மா, காப்பாத்தம்மா' நெஞ்சம் வருந்தி வேண்டியது. ஏக்கத்தோடு அத்திசை பார்த்தான்.

ஓய்ந்தது; அந்தகார இருள். 'யாருக்கு? என்ன நடந்தது...?' மனம் குடைந்தது.

கண்ணை சுருக்கி நன்றாக உற்றுப்பார்த்தான். இருள் திரை; எதுவும் தெரியவில்லை. நீண்டநேரம் மன அமைதியற்று கடலைப் பார்த்தபடி இருந்தான்.

மனம் சோர்ந்துபோனது, கையை மடித்து தலைக் கணைவைத்து மண்ணில் சாய்ந்தான். அவனைச்சுற்றி இருள். ஒன்றிரண்டு வெள்ளிகள் மட்டும் மின்னின.

கண்கூசியபோது எழுந்தான். வெய்யில் முகத்தில் விழுந்தது; பதறி எழுந்து கடலைப் பார்த்தான். சற்றுத் தொலைவில் மனித உடல் ஒன்று; அலை அற்ற கடல் அது அசையாது கிடந்தது.

சற்று கரையில் என்றால் யாராவது ஒருவன் இறங்கி இழுத்து வந்திருப்பான். ஆனால் இது சிறிது தள்ளிக் கிடந்தது.

கரையில்சனம் கூடியது. உடல் அசையவில்லை; கும்பல் அசைந்தது. ஒருவருக்கும் இறங்கத் துணிவு வரவில்லை. வழியில் 'அவங்கள் வந்திட்டா...', சிறிது நேரத்தில் இரண்டு உடல்கள் மிதக்க வேண்டியிருக்கும்.

அவனுக்கு வியர்த்தது. இதயம் வெந்து தவித்தது. சக மனிதனொருவன் சடலமாக கடலில்; அநாதரவாக...; வெறும் பார்வையாளனாக எப்படி இருப்பது ?

இறங்கினான்; கால் நனைந்தது. சேறு இழுத்தது. அவன் உணரவில்லை. நடந்தான். கரை சலசலத்தது; அவனுக்கு கேட்கவில்லை.

சடலமாக கிடப்பது ஒருவனோ ஒருத்தியோ, ஆனால் மானிடன். நேற்றுவரைக்கும் இரத்தமும், சதையும், உணர்வுமாய் உலாவிய மனிதன். உறவுகள், பந்தங்கள், பிணைப்புகள், நெருக்கடிகள், அதற்குள் தவிப்பவர்களின் பிரதிநிதிகளில் ஒராள்.

மனைவிக்கோ கணவனுக்கோ ஏதாவதொரு வாக்குறுதியை கொடுத்துவிட்டு இங்கு சடலமாக...

இவனது அல்லது இவளது வரவை எதிர்பார்த்தபடி யாரோ ஒருவர், பலராககூட இருக்கலாம் காத்திருப்பார்கள். வீட்டை விட்டுப் புறப்படேக்கை கண்டாயத்தில் நின்ற அவனதுமனைவி மாதிரி, ஆடை அற்று நிர்வாணமாக தாயின் இடுப்பில் நின்று கையசைத்த அவனதுகுழந்தை மாதிரி ,

நெஞ்சு நனைந்தது; நீந்தினான். களைத்து விடக்கூடாது என்ற நிதானத்துடன் கைகளும் கால்களும் அசைந்தன. இலக்கு தொலைவில், இந்நேரத்தில் எல்லாம் மிகவும் முக்கியமானது நிதானம்தான். சஞ்சலம் அல்லது அவசரம்எல்லாவற்றையுமே பாழாக்கலாம்.

நெருங்கி விட்டான்; தற்போது சிலமுடிவுகளுக்கு வந்திருந்தான். அரை நிர்வாணமாக ஓர் ஆணின் சடலம் தலைகுப்புற கிடந்தது. தலைமயிரும் எஞ்சிய ஆடையும் அடையாளம் சொல்லியது.

உயிர்ப்பறவை பறந்த வெறும் கூடு. உணர்வில்லை; அசைவில்லை. அலையின் புறத்தாக்கத்துக்கு அசையும் சடம். சாவு ஒரு மனிதனை சவமாக்கி, சடலமாக்கி, சுற்றி இருப்பவர்களை வருத்தி நோகடித்து ...

சடலத்திற்கும் அவனுக்கும் இடைவெளி இன்

www.tamilarangam.net



னும் சில எட்டுகள்தான். இடைவெளி நன்றாக குறுகிவிட்டது. உன்னி வலித்தான் என்றால் பத்துப் பதினைந்து வினாடியில் அதை தொட்டுவிடலாம்.

அவர்களுக்குள் வேறுபாடுகூட பெரிதா ஒன்றுமில்லைப்போல் அவனுக்கிருந்தது. அவன் மனிதன், அது சடலம். அவன் உணர்வுமயமானவன் அது சடலம். மற்றும்படி ஒன்றுமில்லை.

இவனுக்காக படலைவரை வந்து வழியனுப்பினவள் காத்துக்கொண்டிருப்பதைப் போலத்தான் அந்த மனிதனுக்காகவும் ஒருத்தி காத்திருப்பாள். பிள்ளைகளின் தொகை ஒரு வேளை மாறுபடலாம்; காத்திருப்பு ஒன்றுதான்.

இவனுக்கு சந்தர்ப்பம் இருக்கிறது. மனைவியைப் பார்க்க, பிள்ளைகளைப் பார்க்க; அவனுக்கு முடிந்தது. இவன் போகாவிடில் வீட்டில எப்படி அடுப்பெரியாதோ, அதைமாதிரித்தான் அவனது வீட்டில இன்றைக்கு எரியாது.இனி எத்தனை நாளுக்கு எரியுதோ...

நினைவுகளை கலைத்து உன்னி வலித்து நிதானித்து நிமிர்ந்தான். தூரத்து காற்றில் உதைப்புச் சத்தம்; நெஞ்சு திகைத்தது. கையும் காலும் இயங்கமறந்து உதறியது. சடலம் மெதுவாக அவனைநோக்கிஅசைந்தது.

தூரத்தில் புள்ளியாக ஹெலி.

அந்தநாசமறுத்த இயந்திரத்திடமிருந்து தப்புவது இயலாத காரியம். கடல். மறைவற்ற வெளி. எதிர்ப்பின் இருப்பை இலகுவாக உணர்ந்து கொள்ளும்வசதி.

சிலவேளைகளில் அவன் தண்ணீரில் தொடுவதுமாதிரிக்கூடவருவான். சடலத்தை அவர்கள் கண்டுவிடுவார்கள்; ஆனால் அது சடலம் தான் என்பதை உறுதிப்படுத்த இரண்டு மூன்று சுழற்ச்சி அவனுக்குதேவைப்படும் அதற்குள் சடலம் சல்லடையாகி விடும்.

அவன் தப்ப முயற்சிக்கலாம். மூச்சை அடக்கி சுழியோடி முயன்று பார்க்கலாம். ஆனால் அது உறுதியாக, சொல்லமுடியாது. இப்படியான சந்தர்ப்பங்களில் எவரும் தப்பிவந்ததாகவும் அவனுக்கு நினைவில்லை.

எப்படியோ சாவு அருகில் வந்துவிட்டது. இன்னும் சிறிது நேரத்தில் இரண்டு உடல்கள் மிதக்கும்; சனம் கரையில் கூடிநிற்கும். இன்னொருவன்அவற்றை இழுத்துச் செல்லவருவான்.

அந்த மூன்றாவது மனிதனுக்கு உதவ வேண்டும் போல் அவனுக்கிருந்தது. கயிற்றின் ஒரு நுனியை சடலத்தின் கழுத்தில் போட்டான். மறுமுனையை பல்லால் இறுகப்பற்றினான். வேகமாக நீந்தினான். தன்னால் இயலக்கூடியளவு வேகமாக.. சக்தி எல்லாம் ஒன்றிணைத்து மிக வேகமாக...

மாலை. இருசடலங்கள் அலையற்ற கடலில் அசைவற்று... கரையில் கும்பலாக சனம்.

அவன் கரையில் நின்று வெறித்துப்பார்த்தான். மனிதர்கள் அநாதரவான சடலங்களாக, அழுகி சிதைந்து..., சகமனிதனொருவன் வெறும் பார்வையாளனாக ... எப்படி...

நீர் கால் நனைத்தது. சேறு இழுத்து நிறுத்தியது. வீட்டில் காத்திருக்கும் மனைவியும் பிள்ளைகளும் நினைவுக்கு வந்துவிட்டு சென்றார்கள். தொடர்ந்து நடந்தான்.

அவன் வெற்றியடையலாம்; வெல்லத்தான் வேண்டும். இல்லாவிட்டால்...

அந்திக் கருக்கலில் இன்னொரு மனிதன் இறங்குவான். □□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தென்னிந்திய சினிமாப்படங்களை ஏன் தடை செய்யவேண்டும்?

தென்னிந்தியாவில் இருந்து இறக்குமதியாகும் தமிழ்சினிமாப் படங்களை தடைசெய்வதுபற்றி சமூகத்தின் பல தரப்பட்டவர்களுடனும் கலந்துரையாடிய போது அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இங்கே தருகின்றோம்.

●● தமிழகத்துத் தமிழ் சினிமாவை தமிழீழத்தில் தடை செய்வது பற்றிய தங்கள் கருத்து என்ன?

**பண்டிதர் வீ. பரந்தாமன்**
(வயது 50) ஆசிரியர்.

□□ சினிமா ஒரு ஆற்றல் வாய்ந்த கலை ஊடகம். அது செவி வழியாகவும் கட்புலனூடாகவும் ஒரே நேரத்தில் மக்களை சென்றடைகிறது.

அத்துடன் அதிக மக்களை ஈர்க்கும் வடிவமும் சினிமாவேதான்.

இத்தகைய ஆற்றலுள்ள ஊடகம் ஒரு சிறிய இலட்சியப் போக்குடனும் கலை உணர்வுடனும் தொழிற் படுமானால் அதன் சிறப்பை சமூகம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் இன்றைய தமிழகத்துச் சினிமா ஏதாவது இலட்சிய இலக்குடன் செயற்படுகின்றதா? என்றால் இல்லை. மக்களுடைய கீழ் மட்டமான ஆசைகளுக்குத் தீனி போட்டுத் திருப்திப் படுத்தி அவர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் முயற்சியாகவே உள்ளது.

எம்மைப் பொறுத்தவரை, பல வகையிலும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் மிக முக்கியமான உடனடித் தேவைகளுக்கு அப்பால்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தச் சினிமாக் கவர்ச்சி
இட்டுச் செல்கிறது.
இன்று யுத்தத்தினால் குழம்பிப்
போயிருக்கும் மக்களுக்கு ஒரு மனச்சுமை
இறக்கமாக இந்தச் சினிமா அமையும்
எனச் சொல்லப்படுகிறது.
ஆனால் இது அந்த வேலையைச்
செய்வதிலும் பார்க்க
அவர்களை வேறு திசையில்
திருப்பி மேலும் சீரழிக்கிறது.
இதை நோக்கும் போது,
முன் குறிப்பிட்ட நியாயம் பொருத்தமற்றுப்
போகிறது.
வேண்டுமானால் மக்களுக்குரிய
இலட்சியத்தைக் குறிக்கும்
படங்களை நாம் தயாரிக்க வேண்டும்.
இந்த முயற்சி இன்று நடந்து வருகின்றது.
உண்மை வாழ் நிலையைப்
பிரதிபலிப்பதாகவே எந்தக் கலை
ஊடகமும் இருக்க வேண்டும்.
அதுவே சிறந்த கலையின்
தொழிற்பாடுமாகும். ஆனால்
தமிழகச் சினிமா என்பது
தமிழக மக்களின் வாழ்வையோ
அல்லது உலகெங்கும் தமிழ் பேசும்
மக்களின் உண்மை வாழ்வையோ
பிரதிபலிப்பதாக என்றுமே இருந்ததில்லை.
எனவேதான் இவ்வாறான சினிமா
எமக்கு அவசியமற்றுப் போகிறது.
ஆகவே இந்தச் சினிமாவைத் தடை
செய்வது பற்றி மகிழ்ச்சிதான்
ஏற்படுகின்றது.

□□

## திரு. த. செல்வரத்தினம்
(வயது 45) விவசாயி, புத்தூர்.

ஜீரணிக்க முடியாத அளவுக்கு
இந்தச் சினிமாவில் ஆபாசம் நிறைந்துள்ளது.
சுருக்கமாக கூறுவதானால் இளைய
தலைமுறையை இந்தப்படங்கள்
சீரழிக்கின்றன.
அவர்களின் எதிர்காலத்தையே
பாழாக்குகின்றன. எமது மண்ணில்
தற்பொழுது நடைபெற்றுக்
கொண்டிருக்கின்ற அதியுன்னதமான
போராட்டத்தை உணர்ந்து கொள்ள
முடியாதவாறு சிந்தனையை மழுங்கடிக்கிறது
இந்தச் சினிமா.
எனவே இந்தச் சினிமாவைத் தடை
செய்வது வரவேற்க வேண்டியதே.
எங்கள் போராட்டச் சூழ்நிலையில்
மிச்சப்படுத்த வேண்டிய பொருளாதாரம்
இந்தச் சினிமா மோகத்தின்
மூலமாக வீண்விரயம் ஆக்கப்படுகின்றது.

□□

## செல்வி. தி. ஜீவராணி
(வயது 26) தட்டச்சாளர், நீர்வேலி.

மிக மோசமான நிலைமையில்
தமிழ்ச் சினிமா சென்று கொண்டிருக்கிறது.
அதைப் பொதுவாக பார்க்க
முடியவில்லை என்றே சொல்லலாம்.
தரக்குறைவான காட்சிகள்,
மோசமான பாடல்கள்,
நம்பமுடியாத கதையமைப்பு
என்பனவற்றுடன்
நமது சூழலைச் சீரழிக்கின்ற
எல்லாத்தன்மையையும் இந்தச் சினிமா
கொண்டுள்ளது.
கலாச்சாரச் சீரழிவு கூட
இந்தச் சினிமாவினால் ஏற்படுகின்றது.
அனேகமாக இளந்தலை முறையினர்,
குறிப்பாக மாணவர்கள்
இந்த மாயையில் சிக்கித் தம்மை
அறியாமலே சீரழிகின்றனர்.
இப்படி இருக்கும்போது தென்னிந்திய சினிமா
எமக்குத் தேவையில்லை
என்றே சொல்லலாம்.

□

## திரு வ. வசந்தகுமார்
(வயது 21) அளவெட்டி

தென்னிந்தியச் சினிமா படங்கள்,
சுருக்கமாக சொல்லப் போனால்

www.tamilarangam.net



ஒரு கிருமி நாசினி வகையினை
ஒத்ததாகவே கருதவேண்டும்.
ஏனெனில், எமது மண்ணில் எத்தனையோ
இடர்கள் சூழவாழ்ந்து
கொண்டிருக்கும் மக்களை தனது
கவர்ச்சியின்பால் ஈர்த்து. கவர்ந்து
கொண்டதோடு மட்டு மன்றி,
அவர்களின் மனோரீதியிலான
மாற்றத்திற்கும், நடப்பியலுக்கும்,
எதிராகவே செயற்பட்டு, அவர்களை
எதிர்காலத்தின் கீழ்நிலைக்கு வழி
நடத்திச் செல்கிறது.
சினிமா என்கின்ற போதைக்கு, மக்களில்
வயது வேறுபாடு இன்றி
எல்லாத்தரத்தினரும் அடிமையாகி,
சினிமாவின் மாய உலக
கற்பனையிலும், போலியிலும் தங்கி வாழும்
மன நிலையில் மக்கள் ஈடுபடுவதை
அவதானிக்க முடிகிறது.
எழுச்சியும், தியாகமும்
நிறைந்து நிற்கும்
இந்தப் போராட்டக் காலத்தில்
மக்களின் மனதினை ஊடறுத்துச் சென்று,
மிகவும் கீழ்த்தரமான
நம்பகமற்ற வாழ்நிலைக்கு
ஊன்று தளமாக இந்தச் சினிமா
இயங்குகிறது.
எனவே இந்தச் சினிமா மோகத்தில்
இருந்து விடுபட்டு, உண்மையான
உணர்வுகளை நேசித்துணர்ந்து கொண்டு
வாழ்ந்து வெற்றி பெற,
இந்த கீழ்த்தரச் சினிமா ரசனையை
அகற்ற, தென்னிந்திய சினிமாப்படங்களை
தடைசெய்வது மகிழ்ச்சி தரக்கூடிய
விடயமாகும்.

□□

## பேராசிரியர் அ. சண்முகதாஸ்

யாழ் பல்கலைக்கழகம்

தரமற்ற தமிழ்ச் சினிமாப் படங்களைத்
தடை செய்வதிலே எவ்வித
பிழையுமில்லை.
அந்நியருடைய ஆட்சியாலும்
பண்பாட்டினாலும், நாம் எம்முடைய
பண்பாட்டின் எத்தனையோ கூறுகளை
இழந்து நிற்கிறோம்.
இந்நிலை இனியும் ஏற்படாவண்ணம்
எம்முடைய சமூகத்தைப்
பாதுகாக்க வேண்டும்.
வர்த்தக நோக்கு ஒன்றையே மனத்திற்
கொண்டு மலினப்பட்ட
உணர்வுகளுக்குத் தீனி போடும் பல
தமிழ்ப் படங்கள் விரைவாகவும்
பெருந்தொகையாகவும்
தயாரிக்கப்படுகின்றன. பொது மக்கள்
பொழுது போக்கை விரும்புபவர்கள்.
இதனைப் பயன்படுத்தி இத்தகைய
திரைப்படங்களைத் தயாரிக்கின்றார்கள்.
இவற்றால் மக்கள் தங்களை
அறியாமலே தங்கள் மனம் பழுதடைய
வைத்து விடுகிறார்கள்.
எப்படி ஒரு தாய் பிள்ளையைக்
காப்பாற்ற முயலுவாளோ,
அது போல மானிட நேயமுள்ளவர்கள்,
எம்முடைய பண்பாட்டுப் பாரம்பரியத்தை
நன்கு உணர்ந்தவர்கள்,
எங்கள் மக்களைத் தரமற்ற, சீரழிவு
மிக்க தமிழ்ப் படவுலகிலிருந்து
மீட்க விரும்புகின்றனர்.
இதற்கு நாம் ஒத்துழைப்பு
வழங்க வேண்டும்.

□□

## திரு. சு. மகேந்திரன்

(வயது 47) ஆசிரியர், சண்டிலிப்பாய்.

தடை செய்வது சரியானது
என்றுதான் கூறவேண்டும்.
மிக முக்கியமாக
எங்கள் போராட்டச் சிந்தனை
மழுங்கடிக்கப்படுகின்றது.
இளம் சிறார்களினதும், இளைஞர்களினதும்
சிந்தனை பல திசைகளிலும் செல்கிறது.
சினிமா என்ற நல்ல ஊடகம்
பற்றிய தவறான மதிப்பீட்டை
தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்கள்
தருகின்றன.

www.tamilarangam.net



இவை ஏனைய நல்ல படங்களை
நிராகரிக்கும் மனப் பாங்கை
உருவாக்குகின்றன.
உதாரணமாக 'காற்று வெளி' இங்கே
மிக அண்மையில் தயாரிக்கப்பட்ட
'இனி' என்ற படம் போன்றவை மிகத்
தரமானதாக இருந்தும்கூட ஆர்வமுடன்
ரசிக்கும் மனநிலையில் சிலர்
இருக்கவில்லை என்பதை
அந்தப் படங்களைப் பார்க்கும் போது
அவதானிக்க முடிந்தது.

## திரு. செம்பியன் செல்வன்

**(வயது 48) எழுத்தாளர்.**

தென்னிந்தியத் தமிழ்த்திரைப்பட தடை
என்பது திடீரென ஏற்பட்ட தொன்றல்ல.
தணிக்கை என்ற பெயரில் தடைக்கான
முன்னாயத்தங்கள் செய்யப்பட்டன.
தென்னிந்தியப் படங்களில்
முக்கியமாக இடம் பெறுவதென்ன?
பாலியல், வன்முறை, இரட்டை
அர்த்த வசனம், ஆபாச உணர்வினைத்
தூண்டும் ஒலி, ஒளிப்பதிவுகள்,
யதார்த்தத்துக்கு மாறான
சம்பவத் திணிப்புகள் என்பனவற்றிற்கும்
மேலாக தமிழீழத்தில் நிகழும்
போராட்டத்தைக்
கொச்சைப் படுத்தும் வசனங்களும்,
(கிளைமாக்ஸ்) உச்சக்கட்டங்களும்
இத்தடையை நியாயப்படுத்துவன.
இன்றைய நிலையில் ஒருபகுதி
இளம் சந்ததியினர்
பொறுப்பற்றவர்களாக படம் பார்த்து
தம்காலத்தையும், வாழ்வையும்
சீரழிக்கும் போக்கு
காணப்படுகின்றது.
இந்த நிலையை வளர்க்கவும்,
போராட்ட முனைப்பினை
மழுங்கடிக்கவும் அரசு
'மண்ணெய்' விலை குறைப்பினையும்
தடை நீக்கத்தினையும் பயன்படுத்த
முனைகிறது.
தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்களில்
எங்களது கலை உணர்வினையோ,
தொழில் நுட்பத்தினையோ
வளர்ப்பதற்கான எந்தவிதமான
அம்சங்களும் இல்லாத நிலையில்
'வீடியோ கசெற்' மூலம் தமிழீழப்பணம்
தென்னிலங்கை நோக்கிச் செல்வதும்
இதனால் தடைப்படுவது
வரவேற்கத்தக்கது.

## ஓவியர் தயா

**(வயது 26)**

உற்பத்தியாகும் இடத்திலேயே தணிக்கை
சம்பந்தமான விழிப்பு ஏற்பட்டிருக்கும்
நிலையில், இங்கு தடை செய்வது
சம்பந்தமான நிகழ்வு
மகிழ்ச்சியளிக்கும் சங்கதியாகவே உள்ளது.
யதார்த்தத்திற்குப் புறம்பான வெறும்
கற்பனாவாதத் தன்மையுடன்
வெளிவரும்
தென்னிந்திய வர்த்தக நோக்கு
சினிமாப் படங்கள்
மக்களிடையே பலவித சீரழிவுகளை
வீட்டுச் செல்கின்றன.
வியாபாரத்தை பிரதான இலக்காக
கொண்டு தயார் செய்யப்படும்
இப்படங்கள் மக்களை கவருவதற்காக
எந்தெந்த விதிமுறைகளை
கையாள முடியுமோ அவற்றையெல்லாம்
கையாளத் தயங்குவதில்லை.
அவை ஆபாசக் காட்சிகளாகவோ
வேறு வன்முறைக் காட்சிகளாகவோ
இருக்கலாம்.
இவையெல்லாம் மக்களின் மனங்களில்
சமூக விரோத செயல்களில்
ஈடுபடுவதற்கான தூண்டலை
வழங்குகின்றன.
இது இறுதியில் பெரும் பண்பாட்டுச்
சீரழிவிற்கு வழிவகுக்கும் என்பது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



தெளிவான விடயம்.
இவை தவிர, எமது போராட்டம்
முனைப்புடன் நடைபெறும்
தற்போதைய காலத்தில்
மக்களின் போராட்ட உணர்வைச் சிதைத்து
திசைதிருப்புவதற்கும் தென்னிந்திய
சினிமா துணைபோகின்றது.

இவ்வாறாக நச்சு விதைகளைத் தூவும்
தென்னிந்திய சினிமா மீதான
தடை அவசியமும் அவசரமானதும் கூட.
இவற்றுடன் இதே தன்மையதான
வேற்று மொழிப் படங்களையும்
தடை செய்ய வேண்டும் என்பதே
எனது விருப்பமாகும்.

□□□



# மெல்ல உற்றுக்கேள்

சுதாமதி

அந்திசாய அழகுகாட்டும்
அடிவானம் இப்போது
இல்லை.
புகைவாங்கிப்போய்
மேகங்கள் உருக்குலைந்து
கலைகின்றன.
இளவேனிற்காலம் தென்றல்மோத
புதிய பூக்கள் மலர்வதில்லை.
அமைதி உறையும்
தெருக்களும்
அலைகளடங்காத கடலும்
இன்னும் இங்கே
இதயம் பிழிந்த சோகத்தோடு
அநாதையாய்
உறவுகளின் வருகைக்காய்த்
தவிக்கின்றன.

நேற்றைய நாளில்
பொழிந்த பால்நிலவு
இன்னும் மாறாது பூத்தது.
ஆனால் அனுபவிக்க
மனிதர்கள் இல்லை.
தலைக்கறுப்பே காணாத
மரணப்படுக்கை.
அதில் ஆவேசங் கொண்டனவாய்
இடைவரும் பச்சைப்பேய்கள்.
கோரத்தாண்டவத்தில்
ஊழிநடனத்தில்
உருமாறிப்போன என்தேசம்
உன்னிடம் எதையோ
யாசிக்கின்றது.
மெல்ல உற்றுக்கேள்
அதன் உயிர்ச்சுருளின்
உணர்வுகளை.

□□

www.tamilarangam.net






எப்பொழுது
எது
எப்படி?

கலாநிதி சோ. கிருஷ்ணராசா

# கலையின் உருவாக்கம் இருப்புப்பற்றிய விளக்கங்கள்

கலையை "போலச் செய்தல்" முறையாக, எடுத்துக்காட்டும் கொள்கையாளரின் அபிப்பிராயப்படி கலைப்படைப்புகள் நிஜஉலகின் பிரதிகளாகும். பொருட்களையும் நிகழ்ச்சிகளையும் பார்த்து மீளுருவாக்கம் செய்யும் பொழுது கலை ஆக்கப்படுகிறதென்பது இவர்களது நிலைப்பாடு. நாளாந்த வாழ்க்கையின் நடப்பனவும் திரைப்படங்களில் நிகழ்வனவும் ஒன்றல்ல. எனவே வாழ்க்கையில் நடைபெறுவனவற்றை திரைப்படம் மீளுருவாக்கம் செய்தாலும் அல்லது போலச் செய்து காட்டினாலும் இவையிரண்டும் இரு வேறுபட்டவையென வேறு சிலர் கருதுகின்றனர். இவர்களுடைய அபிப்பிராயப்படி கலைகள் தமக்கேயுரியதும் சிறப்பானதுமான ஒரு யதார்த்தத்தைக் கொண்டவை.

கலை என்றால் என்ன? அவற்றின் இயல்பு யாது? அவை எவ்வாறு உருவாக்கப்படுகின்றன? என்பது போன்ற வினாக்களுக்கு அழகியலாளர் பலவிதமான விடையளித்துள்ளனர். குரேச்சே (Croce) போன்றவர்கள் கலையின் மெய்யான இருப்பிடம் கலைஞனது உளமாகுமென்றும், பிண்டப் பிரமாணமாகத் தென்படுவது அதன் பிரதியே அன்றி வேறெல்லவென்றும் குறிப்பிடுகின்றனர். ஆனால் கலையென்பது எப்பொழுதும் பிண்டப் பிரமாணமாய்ப் புலப்படல் வேண்டுமென மறுசாரார் வாதிடுகின்றனர். இவர்களது அபிப்பிராயப்படி பிண்டப் பிரமாணமாய்ப் புலப்படாது போனால் கலையனுபவம் கலைஞர்களுக்கில்லாது போய்விடும். கலையென்பது புலப்படும் பிண்டப் பொருளல்ல. மாறாக அப்பொருளில் பொதியப்பட்ட அனுபவமேயாகுமென பிறிதொரு சாரார் எடுத்துக்காட்டுகின்றனர். சிற்பமென்பது வெறும் கருங்கல் அல்ல, அக்கருங்கல் கலைஞர்க்குத் தரும் காட்சியே அதனைச் சிற்பமென (கலை) குறிப்பிட்டழைப்பதற்கு காரணமாகிறதென்பது இவர்களது வாதம். பிராக் (Prague) சிந்தனா கூடத்தைச்சார்ந்த உருவவாதிகளின் அபிப்பிராயப்படி கலைப் பொருள் ஒரு குறியாகும். அதனைக் கலைஞனின் உணர்வு நிலைவெளிப்பாடாகவோ அல்லது நுகர்வோனின் ரசனை வெளிப்பாட்டிற்குரியதொன்றாகவோ அல்லது ஒரு செய்பண்டமாகவோ தனித்து இனங்காணுதல் தவறாகும். கட்புலனாகும் குறிப்பான் என்ற வகையில் கலை ஒரு செய்பண்டமாகவும், உட்குறிப்பால் கலை அழகியரல் சனைக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



ரியதொரு பொருளாகவும், குறிப்பிடப்படுவது எது என்ற தொடர்பில் கலைப்பொருளாகவும் இருப்பதைப் புரிந்துகொள்ளவேண்டுமென்று இவர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்.

## உருவவாதம்

உருவவாதம் முன்னர் எப்போதோ தோன்றிய கலைக்கொள்கையல்ல. நவீன ஓவியங்களின் நியாயப்படுத்தும் வகையில் இந்தநூற்றாண்டின் தொடக்கத்தில்ஐரோப்பாவில் உருப்பெற்றதொரு கலைக்கொள்கையே உருவவாதமாகும்.

வர்ணம், வடிவம், புகைப்படக்கோணம் சந்தம் ஒலியியைபு அல்லது தொடையியல்பு என்பன கலைக்குரிய நியமப்பண்புகளில் சிலவாகும். படைப்பொன்றை ரசிப்பவர் பொதுவாகவே இத்தகைய நியமப்பண்புகளை கலைப்படைப்பில் இலகுவாகக் கண்டறிந்து கொள்வர். அழகியலனுபவத்திற்கும் கலைகளை மதிப்பிடுவதற்கும் இத்தகைய நியமப் பண்புகள் மிகவும் இன்றியமையாதவை யென உருவவாதிகள் கருதுகின்றனர்.

செசான் (*Cezanne 1839 - 1906*) தற்கால ஓவியநாயகர்களில் ஒருவர். இவருடைய நிலைப்பொருள் ஓவியமொன்றைப் பற்றி விமர்சகர் ஒருவர் குறிப்பிடும்பொழுது ''தற்காலத்தவராய் எமது கண்களிற்கு செசானின் நிலைப்பொருள் ஓவியம் அத்துணை அருபமானது போலப் புலப்படுவதில்லை என்றும், மரபுவழி ஓவியங்களை அவை இன்னவை பற்றியதென எவ்வாறு எம்மால் இலகுவில் கூறக்கூடியதாயிருக்கிறதோ அவ்வாறே செசானின் நிலைப்பொருள் ஓவியத்தில் காணப்படுவனவற்றை இன்னவையெனகூறக் கூடியதாயிருக்கிறதென்றும்'' குறிப்பிட்டார். ஆனால் செசானின் அந்த நிலைப்பொருள் ஓவியம், வரையப்பட்ட காலத்து காரசாரமான கண்டனங்களை எதிர்நோக்கியது. செசான் ஒரு மோசமான ஓவியர் என்றும், அவரது படைப்பு நிலைப்பொருள் ஓவிய வரைவிற்குரியவிதிகளை மீறியுள்ளதென்றும் யதார்த்தத்தில் காணப்படுவது போல அவரது படைப்பு அமையவில்லை என்றும் பலவாறாக விமர்சிக்கப்பட்டது. ஆனால் உருவவாதிகளோ செசானை நியாயப்படுத்தும் வகையில் அவரது படைப்புக்கெதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்களையெல்லாம் நிராகரித்தனர். கதை சொல்லுவது ஓவியக் கலையின் பணியல்ல. எவ்வாறு ஒரு நிகழ்ச்சி நடந்ததென கதை சொல்ல விரும்புகிற ஒருவர் கேட்பவனைச் சுயமாகச் சிந்திப்பதற்கு இடம்கொடுப்பதில்லை. ஆனால் ஓவியக்கலையோ அவ்வாறில்லை. ஓவியம் பற்றியும் வர்ணங்கள்பயன்படுத்தப்பட்ட முறை பற்றியும், வெளிபற்றியும் ரசிப்பவனைச் சிந்திக்க தூண்டுவதே ஓவியக்கலையின் பணியாகுமென உருவவாதிகள் வாதிட்டனர். உருவவாதம் பற்றிய மிகச்சமீபத்திய விளக்கத்தின்படி செசானின் நிலைப்பொருள் ஓவியத்தில் வருகிற ''அப்பிள் பழத்தைப்'' பார்க்கும் ஒருவர்க்கு நிஜமாக அப்பிள்பழம் பற்றிய சிந்தனை வரலாகாது. மாறாக நிஜமான அப்பிள் பழத்தைக் காணும் பொழுது அந்த ஓவியம் ஞாபகம் வருதல் வேண்டும்.

உருவவாதம் கட்புலக்கலைகள் பற்றி மட்டுமே ஆராய்கின்றதொரு கலைக்கொள்கையல்ல. ஏனைய கலைகள் பற்றியும் அக்கறை கொண்டுள்ளது. இலக்கியத்தில் என்ன சொல்லப்படுகிறதென்பது முக்கியமல்ல, எப்படி சொல்லப்படுகிறது; எத்தகைய சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனவென்பதே முக்கியமானதென உருவவாதிகள் வாதிடுகின்றனர். அதுபோல இசையில் தொனி, சந்தம் என்பனவே முதன்மையானவை. அவை வெளிப்படுத்தும் கருத்து இரண்டாம் பட்சமானதேயென இவர்கள் வாதிடுகின்றனர். அதாவது கலைகள் வெளிப்படுத்துவது எதுவென்பது முக்கியமல்ல. கலைப்பொருளின் இயல்பான குணாதிசயங்களே முக்கியமானதென உருவவாதிகள் கூறுகின்றனர். ஒரு கலைப்படைப்பின் உள்ளடக்கம் எப்படியிருந்த பொழுதும் அது எவ்வாறு தரப்படுகிறதென்பதை நோக்குவதே கலைவிமரிசனத்தின் பணியாகுமென இவர்கள் வற்புறுத்துகின்றனர்.

www.tamilarangam.net

www.tamilarangam.net



கட்புலக்கலைதொடர்பான உருவவாதக் கொள்கைகளில் கிளிவ் பெல் (Clive Beel) ரோஜர் ஃபிறை (Royer Fry) என்ற இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது அபிப்பிராயப்படி அழகியலுக்கு கலைப்படைப்பின் உள்ளடக்கம் முக்கியமானதல்ல. கலைப்படைப்பொன்றிலிருந்து நேரடியாகத் தரப்படுவதும், கலைஞனின் புலக்காட்சிக்குட்படுவதும் அதன் உருவமேயாகும். கலைகள் ஒவ்வொன்றும் தமக்கேயுரிய சிறப்பான கலைவடிவங்களைக் கொண்டுள்ளன. கோடுகள், வர்ணங்கள், உருவம் என்பன ஓவியத்திற்குரிய சிறப்பியல்புகளாகும். சந்தமும் ஓசையொழுங்கும் இசைக்குரியவை. இலக்கியம் சொற்றொடரையும், படிமங்களையும் தன் சிறப்பியல்புகளாக கொண்டுள்ளது. உடலசைவு நடனத்திற்கு முக்கியமானது.

பிரதி செய்தலே ஓவியக்கலையின் நோக்கமாயின் அங்கு ஓவியனின் புனைதிறன் வியப்பைத் தவிர வேறெதனையும் நுகர்வோன் கண்டனுபவிக்க முடியாது. ஒத்தியைபு, ஒளி-நிழல், வர்ணம் என்பவற்றினால் தூண்டப்பட்டதும், கற்பனையாற்றலுடன் கூடியதுமான உணர்ச்சி வெளிப்பாடே ஓவியமொன்றிற்குக் "கலை" என்ற தகுதியைத் தருகிறதென ஃபிறை வாதிடுகிறார். கிளிவ் பெல்லும் அழகியல்சார் உணர்ச்சி வெளிப்பாட்டை கலைப்படைப்புகளிற்கேயுரிய சிறப்பியல்பான உருவமே தருகிறதென்கிறார். இவ்விருவரினதும் அபிப்பிராயப்படி கலைப்படைப்பை ரசிப்பதற்கு அப்படைப்புப் பற்றிய வரலாறோ அல்லது முன்னறிவோ எதுவும் தேவையில்லை.

கலைகள் ஒவ்வொன்றும் தமக்கேயுரிய சிறப்பியல்பான உருவத்தால் நுகர்வோனிடத்து அழகியலுணர்வை தோற்றுவிக்க வல்லதாயுள்ளதென எடுத்துக்காட்டுவதே உருவவாதிகளின் பிரதான நிலைப்பாடாகும். கலைப்படைப்பொன்றின் உள்ளடக்கம் பற்றிய உரையாடல் ஒருபொழுதும் கலை பற்றிய உரையாடலாக இருக்க முடியாது. மாறாக அவ்வுரையாடல் கலைப்படைப்பு வருணிக்கும் உலகு பற்றிய உரையாடலாகவேயிருக்குமென்றும், அது அழகியலின் வரையறைகளிற்கு அப்பாற்பட்டதென்றும் பெல், ஃபிறை மற்றும் இவர்களைப் பின்பற்றுபவர்களின் வாதமாகும். அப்படியின், மனிதன், சமூகம் என்பன பற்றி கலையில் மேற்கொள்ளப்படும் உரையாடல் அழகியலிற்குரியதல்ல. எனவே அவை பற்றிப் பேசுவதை விடுத்து ஓவியமாயின் ரேகைகள், வர்ணங்கள் என்பன பற்றியே உரையாட வேண்டும். கலையோடு தொடர்புறா விடயங்களை கலையோடு தொடர்புபடுத்துவதன் மூலம் கலை-அழகியல் உரையாடல்கள் திசைதிருப்பப்படுகின்றனவென இவர்கள் வாதிடுகின்றனர். ஓவியத்தின் சிறப்பு அதிலிடம் பெற்றுள்ள ரேகைகளிலும், வர்ணத்திலும், வடிவத்திலும் தங்கியுள்ளதேயொழிய அப்படைப்புடன் தொடர்புடைய கதைகளில் அல்ல, அதுபோலவே இலக்கியம் எதனைச் சொல்லுகிறதென்பதாலல்ல, எப்படி சொல்கிறதென்பதாலேயே சிறப்புப் பெறுகிறதென உருவவாதிகள் எடுத்துக் கூறுகின்றனர். இலக்கியம் தொடர்பாக ரஷ்சிய சிந்தனா கூடத்தைச் சார்ந்த உருவவாதிகளின் கருத்துக்கள் முக்கியத்துவமுடையன. பலவகைத்தான கலையாக்க உத்திகளை முழுமையாக ஒன்று சேர்ப்பதன் மூலம் இலக்கியமென்ற கலைவடிவம் பெறப்படுகிறதென விக்டர் ஸ்சோலோவ்ஸ்கி கலைக்கு வரைவிலக்கணம் தருகிறார். இலக்கியமொழி பற்றிய அக்கறையே உருவவாதிகளின் பிரதான சிந்தனையாகவிருக்கிறது. இலக்கியமொழியின் கட்டமைவே அதனை நாளாந்த பாவனையிலுள்ள சாதாரண மொழியிலிருந்துவேறுபடுத்துகிறதென இவர்கள் எடுத்துக்காட்டினர். தமிழ் நாவல் இலக்கியப் பரப்பில் இலக்கியத்திற்கான மொழியின் கட்டமைப்பு பற்றிய கரிசனம் லா. சா. ராமாமிர்தத்திடம் காணப்பட்டது.

உருவத்திற்கு முதன்மையளிக்கும் இச் சிந்தனைப் போக்கு முதன்முதலில் அரிஸ்ரோட்டிலின் கவிதையியலிற் காணப்படுகிறது. கதையை அதன் ஆக்கப் பின்னலிலிருந்து வேறுபடுத்திய அரிஸ்ரோட்டில் ஆக்கப் பின்னலை ஆதாரமாகக் கொண்டே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடகங்களிற்கான கதைகள் கட்டமைக்கப்படுகிறதெனக் குறிப்பிட்டார். ஆக்கப்பின்னல் என்பது பல்வேறுபட்ட தனிப்பட்ட சம்பவங்களை ஒன்றாக ஒழுங்குபடுத்தியமைத்தல் எனவும் குறிப்பிட்டார். அரிஸ்ரோட்டிலின் இக் கருத்து ரஷ்சிய உருவவாதிகளின் அக்கறைக்குள்ளானது. ஒரு படைப்பின் இலக்கியத்தகுதி அப்படைப்பின் ஆக்கப்பின்னல் அமைப்பிலிருந்தே பெறப்படுவதாக இவர்கள் வாதிட்டனர். நாவல்களிலும், சிறுகதைகளிலும் ஏன் நாடகங்களிலும் கூட நடைபெறுவதாகக் கூறப்படும் சம்பவங்கள் எமது வாழ்க்கையில் நடைபெறுவனவே எனஏற்றுக்கொண்டஉருவவாதிகள், ஏலவே பரிச்சயமான இச் சம்பவங்களை ஓர் படைப்பினூடாக சுவைஞர்கள் நுகருவதில் ஆர்வம் கொள்வதற்கான காரணம் அப்படைப்பின் ஆக்கப்பின்னல் முறையேயாகுமெனக் கூறுகிறார்கள். பரிச்சயமான விடயங்களைப் பரிச்சயமற்ற முறைகளில் கூறுவதாலேயே அவற்றை நுகரும் ஆர்வமும், வாசிக்கும் ஆர்வமும் சுவைஞர்க்கு ஏற்படுகிறது. உள்ளடக்கம் அக்கறைக்குரியதல்லாததாகப் போய்விடுகிறது. கலைத்துவத்தை அனுபவிக்கும் வழிமுறையே கலையென்பதால் அங்கு உள்ளடக்கம் முதன்மை பெறுவதில்லையென ஸ்கொலோவ்ஸ்கி குறிப்பிடுவது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

ஆக்கப்பின்னலென்பது எதேச்சையான தனிச்சம்பவங்களை வெறுமனே தொகுத்து ஓரமைப்பாகத் தருவதல்ல. ஆக்கப்பின்னல் எவ்வாறு மேற்கொள்ளப்படவேண்டுமென ஆராய்ந்த போறிஸ் தமஷேவ்ஸ்கி (Boris Tomoshevsky) ஒரு தனிக்கூற்று அல்லது செயலை ஆக்கப்பின்னலிற்குரிய மிகச்சிறிய அலகாகக் கொண்டு சுவைஞர்க்குப் பரிச்சயமற்றதாய் இருக்கத்தக்க வகையில் பல்வகை உத்திகளைப் பயன்படுத்திக் கட்டுதலே என்கிறார். தனிக்கூற்றுக்களும் செயல்களும் நிஜவுலகிற்குரியவையே எனினும், பரிச்சயமற்ற முறையில் கட்டப்படுவதாலேயே சுவைஞரின் ஆர்வத்துக்குரியதாகிறது. கட்டமைப்பு உத்திகளிற்கு முதன்மையளிப்பதுடன் இவ்வுத்திகளே ஒரு படைப்பிற்கு "கலை" என்ற அந்தஸ்தைக் கொடுக்கிறதென உருவவாதிகள் வாதிடுகின்றனர்.

கலையின் உருவம் அழகியலனுபவத்திற்கு இன்றியமையாததேயெனினும் உள்ளடக்கமும் முக்கியமானதேயென்பது உருவவாதத்திற்கெதிரான விமர்சகர்களது நிலைப்பாடாகும். ஒரு நாடகம் எவ்வாறு ஆற்றுகை செய்யப்படுகிறதென்பது எவ்வளவு முக்கியமானதோ அதேயளவு முக்கியமானது அது எதனைப் பற்றியதென்பதுமாகுமென உருவவாதத்திற்கெதிரான விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். கொட்சால்க் (Gotshalk) என்பாரின் அபிப்பிராயப்படி கலைப்படைப்பில் உருவம் உள்ளடக்கம் என்ற இரு அம்சங்களும் சமநிலையைப் பெற்றிருத்தல் வேண்டும். சொல்லப்படும் அல்லது வரையப்படும் விடயமும், சொல்லப்படும் அல்லது வரையப்படும் முறையும் ஒன்றுடன் ஒன்று பொருந்தாவிடத்து அது கலையாகாது கலையில் இவ்விரண்டும் இருவேறுபட்ட தனிக்கலைகளல்ல. ஒரே பொருள் பற்றிய இருவேறு பார்வைகளாகுமென்பதை விமர்சகர்கள் கவனத்திற் கொள்ளல் வேண்டுமென இவர் குறிப்பிடுகிறார்.

உருவவாதத்திற்கெதிரான விமரிசனம் தற்கால அழகியலாளர்களிடையே அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது. கலைப்படைப்பின் உள்ளடக்கம் பற்றிய உரையாடல்கள் முக்கியமானவையேயென்றும், சில சந்தர்ப்பங்களில் ஒரு கலையாக்கத்திற்கான காரணிகளும் கலைவிளக்கத்திற்கு உதவுகின்றனவென்றும் தற்கால அழகியலாளர்கள் வாதிடுகின்றனர். உருவம் அல்லது வெளிப்பாடு என்ற வரையறையுள் கலை பற்றிய உரையாடல்களைக் கட்டுப்படுத்தலாகாதென்பது இவர்கள் அபிப்பிராயம். கலைஞனது வாழ்க்கை, அவனது காலத்துப் படைப்புகள், அவனது பண்பாடு என்பனவும் கலையாக்கங்களைப் புரிந்துகொள்ள அவசியமானது. இவர்களின் அபிப்பிராயப்படி சந்தர்ப்ப - சூழ்நிலை பற்றிய அறிவுஒருகலையின் அளிக்கை முறைமை பற்றிய சரியான புரிந்து கொள்ளலிற்கு அவசியமானது. ☐☐


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இருளிலிருந்து

பு. சத்தியமூர்த்தி



வீடு சத்தமில்லாம ஊமையாக் கிடக்கு. அதுக்காக வீட்டில ஒருத்தரும் இல்லையாக்குமெண்டு நினைச்சிடப்படாது. அம்மாவைவிட மற்றை எல்லாரும் வீட்டிலதான் இருக்கிறம். காலம வெள்ளாப்போடயே சயிக்கிளில வாழைச்சேனைக்குப்போன அம்மா பதினொரு மணியாகியும் இன்னும் வரல்ல. அதுதான் எல்லாற்ற முகத்திலயும் யோசினை. ஆனா அப்பா, பெரியண்ணாச்சி, தங்கச்சி எல்லாரும் வீட்டிலதான் இருக்கிறம்.

அப்ப பெரியண்ணாச்சியும் அப்பாவும் வேலைக்குப் போறேல்லையோ? இல்ல. போகேலா. போனா திரும்பி வரேலா. பாழாப்போன ஆமியோ, பொலிசோ, ஊர்காவற்படையோ கொண்டு போடுவானுகள். கொண்டு போனாக் கொண்டு போனதுதான். எங்கையெண்டும், எப்பையெண்டுமில்ல. இருக்கோ இல்லையோவெண்டுமில்லை. வீட்டுக்காறர் ஒண்டு ரெண்டு வருசத்துக்கு அழுதுபோட்டு பிறகு மனசுக்குள்ளேயே பூட்டி வைச்சுக் குமுறுறத விட வேற ஒண்டுஞ் செய்யேலா.

அதுசரி... தங்கச்சி ஏன் பள்ளிக்கூடம் போறேல்ல? அதையேன் கதைப்பான்? பொம்பிளைப் பிள்ளையளை வெளியால விட்டிட்டு பிறகு அதுகளைக் காணேல்ல எண்டு தேடுறதவிட வீட்டிலயே வைச்சிருக்கலாம். அப்ப, அண்ணாச்சியும் அப்பாவும் வேலைக்குப் போகாட்டி வீட்டுப்பாடுகள கவனிக்கிற ஆர்? அதெல்லாம் அம்மாதான். அதுக்குத்தான் அம்மா இப்ப சயிக்கிளில வெளிக்கிட்டிருக்கிறா. காலம வெள்ளாப்போட ராத்திரி உறைய வைச்ச தயிர வாழைச்சேனைப் பக்கத்தில கொண்டு போய் வித்துப் போட்டு அங்கயிருந்து கடல்மீனை வாங்கி ''ஐஸ்'' போட்டு பிளாஸ்ரிக் வாளிக்குள்ள எடுத்துக் கொண்டந்து வீடுவீடா வித்துத்தான் அம்மா வீட்டுப் பாட்டைக் கவனிக்கிறா...

எங்கட ஊர் தென் தமிழீழத்தில இருக்கிறஎல்லைக்கிராமங்களில ஒண்டு. முல்லை, மருதம் எண்டு சொல்லிற நிலங்கள்தான் எங்கட ஊர். ஊரின்ர ரெண்டு பக்கமும் ஆறு ஓடுது. அதோட குளமும் இருக்கு. இந்தப் பிரச்சனைக்கு முந்தி ஊர், தாயைக் கண்டாச் சிரிக்கிற சின்னப்பிள்ளையள் போல சந்தோசமாத்தான் இருந்திச்சு. வயல் செய்யிறதும், காட்டில பிரம்பு வெட்டுறதும் ஆத்திலயும் குளத்திலயும் மீன்பிடிக்கிறதும் பட்டிமாடடைக்கிறதும் தான் ஊராக்களின்ர தொழில்.

வீட்டு ஆம்பிளையள் எல்லாரும் இந்த நாளிலஏதாவது ஒருதொழிலைச் செய்வினம். இதால வீட்டுக்கு வருவாய் எப்பவுமே பிரச்சனையா இருக்கேல்லை. எங்கடஊருக்கு இயற்கைதந்த கொடை அது. தொழில் செய்ய ஒரு முதலுமில்லையெண்டாலும் பிரச்சினையில்ல;

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு சின்னக் கத்தியோட பிரம்பு வெட்டுறாக்களோட பிரப்பங்காட்டுக்குப் போனா, வரேக்க ஒரு பெரிய கட்டுப் பிரம்போட வரலாம். கூடை, கதிரை, பின்னிற ஆக்களுக்கு அதை வித்தா கையில காசு. வீட்டுச்சீவியம் தளம்பலில்லாமப் போகும்.

மாடும் கண்டும் எங்கட ஊரின்ர கண்மாதிரி. பட்டிக்காறர் காட்டு ஓரத்தில ''காலை''யில் மாடுகளை அடைச்சிருப்பினம் வெள்ளாப்போடயே போய் பால் கறந்துபோட்டு மாடுகளைச் சாய்ச்சுக் கொண்டு போய் மேயிறதுக்கு விடுவினம். பாலைப் பாற்சாலையில குடுக்கிற. மாதம் முடியக்காசு. பின்னேரம் மாடுகளைச் சாய்ச்சுக்கொண்டு வந்து''காலை''யில அடைச்சுப்போட்டு வீட்ட வந்தா நிம்மதியான சீவியம். இந்த நாம்பன் கண்டுகள் ஒரு கணக்கான பருவம் வந்தோடன காட்டில போயிடுங்கள். இதாலஅதுகளை கணக்கான வயது வரேக்க ஒண்டில் விப்பினம் அல்லாட்டி கரத்தை மாட்டுக்கு பழக்குவினம்.

ஆத்தங்கரையில வேற ஊராக்கள் வந்துவாடிபோட்டுத்தங்கிப் பொயிலை செய்யிறவை. இங்கத்தைப் பொயில சுறுட்டுக்கு வலு திறமானதாம். அதால யாழ்ப்பாணத்துச் சுறுட்டு முதலாளிமார் இங்கை வந்து பொயில வாங்க வருவினம். ஊரில வயல் செய்தாப் பொன்விளையும் ஆத்தங்கரையில இருந்து பாத்தால் கண் பார்வைக்கு ஏலாத தூரம்வரைக்கும் வயல்வெளிதான் வருசத்தில ரெண்டு போகமும் சும்மா பச்சைப்பாய் கணக்கா வயல் வெளி பச்சைப் பசேலெண்டு இருக்கும். வயல் வெட்டி சூடடிச்சு நெல்லை ஏத்திக்கொண்டு வந்து வீடு நிறைய அடுக்கி வைச்ச நெல்லை வித்தா கையில ஆறு இலக்கத்தில காசு வரும். நெல்லு வித்தாப் பிறகு வயல்காறர் வீட்டுக்காற ரோட ரவுணுக்குப் போனா கரத்தை பிடிச்சுத்தான் சாமான் ஏத்திக்கொண்டருவினம். பிறகு ஊர்க்கோயிலுகளில திருவிழா, தீமிதிப்பு, கொம்பு விளையாட்டு எண்டு ஒரே கொண்டாட்டந்தான்.

முந்தியே சொன்னனான்தானே ஊரின்ர ரெண்டு பக்கமும் ஆறும் குளமும் இருக்கெண்டு. ஊராக்கள் அதில மீன்பிடிக்கிறவை. குளத்தில விரால் யப்பான், சுங்கன் மீனுகள் பிடிபடும் ஆத்தில பெரிய பெரிய செப்பலி மீன் பிடிக்கலாம். தூண்டில் போட்டும் சின்னச்சின்ன தோணியில போயும் மீன் பிடிப்பினம். உந்த மீனை ஊர்க்கடைத் தெருவில வித்துப்போட்டுபோனா குடும்பப்பாட்டக் கவனிக்கலாம். சில பேர் மீன்பிடிக்கிறதோட பட்டிமாடும் அடைப்பினம். இல்லாட்டி மீன்பிடிக்கிறதோட பிரம்பும் வெட்டுவினம். மீன் பிடிக்கப் போற ஆக்களிட்டச் சொல்லிக் கரையில நிக்கிற சின்னதுகள் தாமரைப்பூப்புடுங்குவிக்குங்கள். நீந்தத் தெரிஞ்சவை கொடிவிலத்திப் போய்ப்பூவும்தாமரை இலையும்பிடுங்கி வருவினம். ஊர்க்கோயிலில தாமரைப் பூவாலதான் பூசையாக்குவார் பூசாரியார். தாமரை இலையிலதான் கடையிலயும், சபையளிலயும் சாப்பிடுறது.

□ □

இத்தனை தொழில் இருந்தும் ஏன் ஊர் ஆம்பிளையள் தொழிலுக்குப் போறல்ல? ஏன் வீட்டோட இருக்கினம்? ம்... அதையேன் கேட்பான்? இந்தப் பிரச்சனை தொடங்கின பிறகு அவனுகள் எங்களைப் படுத்துறபாடு கொஞ்சமோ? ஊருக்குநடுவில பொலிஸ் ஸ்ரேசனைக் கொண்டந்திற்றாங்கள். ஒரே குறுக்காலயும் மறுக்காலயும் நடந்து திரிவாங்கள். றோட்டு நீட்டுக்கும் அவனுகளின்ரை ஜீப் ஓடித்திரியும். இரவாகிற்றெண்டா துண்டா வெளிக்கிட ஏலா. வீட்டோட இருந்தாப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போல விடுறாங்களே? இருந்தாப்போல வந்தானுகளெண்டா கண்ணிலகாணுற ஆக்களையெல்லாம் அள்ளிக் கொண்டு போயிடுறானுகள்· எங்களைக் கடவுள் தான் காப்பாத்தணும்.

இப்ப பட்டிக்காறர் பாடு பெரிய கஸ்ரம். மாடுகளைக் காட்டுப்பக்கம் தானே மேய்ச்சலுக்குச் சாய்ச்சுக் கொண்டு போற. சிலநேரத்தில மாடுகள் காட்டுக்கையும் போகுந்தானே! அந்தமாடுகளைப் பிடிக்கக் காட்டுக்கை போனா, காட்டுக்கை ஒழிச்சிருக்கிற பெடியனுகளோட கதைச்சிற்று வாற மெண்ட சந்தேகத்தில "கொட்டியா சப்போட்" எண்டுசொல்லி இழுத்திற்றுப்போனானுகளெண்டா பிறகு, ஆளே இல்ல. இப்பிடி எத்தனை பெடியனுகளைக் கொண்டு போயிற்றானுகள். முந்தி எவளவு பெடியனுகள் நிண்டு வேலை செய்வானுகள் இப்ப பெடியனுகளைக் கண்ணிலயும் காண ஏலா. கொம்பு இழுக்கிறதெண்டா முந்தி எவளவு பெடியனுகள் துள்ளிக்கொண்டு நிப்பானுகள். இப்ப கொம்பிழுக்க ஆக்களும் இல்ல, கொம்பு விளையாட்டும் இல்ல. ஊரில இருக்கிற பெடியனுகளை எண்ணிப்போடலாம். அவளவு ஆக்கள் தான் மிஞ்சியிருக்கினம். ம......

பிரம்பு வெட்டுற மீன்பிடிக்கப் போற ஆக்களின்ர யும்இந்தக்கதைதான். அதுகள் ஆத்துக்கு, குளத்துக்கு பிரப்பங்காட்டுக்கு போனா, அங்கநிக்கிற பெடியனுகளுக்கு சாமான் கொண்டு போய்க் குடுக்கிறதெண்டு சொல்லிப் பிடிச்சிற்றுப் போயிடுவானுகள். அதால மீன்பிடியுங் குறைவு. எந்த நேரம் எந்த இடத்தில ஒழிச்சிருந்து சுடுவானுகள், இல்லாட்டி பிடிப்பானுகள் எண்டு தெரியா. எப்பிடியும் ஒவ்வொருநாளும் ஆராவது அவனுகளிட்ட மாட்டுப்படுவினம். அதால மீன்பிடியும் சரியாக் குறைஞ்சு போயிற்று.

வயல்செய்யிறது அடியோட இல்ல. எங்கட வயலுகளில சிங்களவரைக் குடியேத்திப் போட்டாங்கள் ஒரே சிங்கள மயம் மிச்ச வயலையாவது செய்வமெண்டா அவனுகளிட அட்டகாசம்... வயல் செய்தா ஆமியும் ஊர்காவற் படையும் வந்து வயலையும் எரிச்சு ஊராக்களையும் சுட்டு அநியாயமாக்கிப் போடுவானுகள். இப்பிடி எத்தின தரம் நடந்திருக்கு. இப்ப என்னடாண்டா நாங்கள் வயல் வெட்டி சூடடிச்சா அப்பேக்க வந்து எங்களைச் சுட்டுக் கலைச்சுப் போட்டு எங்கட நெல்லை அவனுகள் அள்ளிக்கொண்டு போயிர்றானுகள். வீடு நிறய நெல்லிருந்த காலம் போய் இப்ப சோத்துக்கு அரிசி வாங்கிற நிலமை வந்திற்று.

□□

அந்தா அம்மா வாறா... மனிசி செரியா மாஞ்சு போயிற்று. வெள்ளாப்போடயே எழும்பி முப்பது கட்டை சயிக்கிள் மிதிச்சு பிறகு வீடு வீடா... மீன் வித்து வாறதெண்டா அம்மா பதினொண்டு, பன்ரெண்டு மணிக்குத்தான் மீன் கொண்டு வாறதால ஊராக்கள் வாங்கிறதும் குறைவு. அதோட அதுகளிட்டயும் மீன் வாங்கக் காசி மில்ல. தொழில் செஞ்சாத்தானே காசி. இப்ப ஊர் தொழிலில்லாமல் சோந்து வாடிப்போய்க் கிடக்கு. அதால அம்மாவுக்கு மீன் விக்கிறதும் பெரியபாடு தான். எண்டாலும் என்னத்தச் செய்யிற. எல்லாம் எங்கட தலையெழுத்தெண்டு தாங்கிறதான்.... முந்தியெண்டா சில நேரத்திலதான் ஊருக்கு கடல் மீன் வரும். மீன் வந்துதெண்டா வந்து அரைமணித்தியாலத்துக்குள்ள முடிஞ்சிடும். கொஞ்சம் பிந்தினா மீன் கிடைக்காது. ஆனா இப்ப வீட்ட கொண்டந்து குடுத்தாலும் வாங்கிறதுக்கு சனத்திற்ற காசில்ல.

எங்கட வீடு றோட்டுஓரத்தோட இருக்கு. எங்கட வீட்டுக்கு வலது பக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கத்திலதான்பொலிஸ்ஸ்ரேசன். இடது. கொலனிக்குப் போறபாதை. அதில அவனுகளிட சென்றி. சென்றிக்கும் ஸ்ரேசனுக்குமிடையில ஒரே நடந்தும் ஜீப்பிலயும் திரிவானுகள். இரவெண்டா ஒரே அவனுகளிட சத்தந்தான். நாயும் விடாம குலைக்க, கடவுளே... பகலில யெண்டா வளவுக்கையும் வருவானுகள்... பெரிய பயங்கரம்.

அம்மா கொண்டு வந்த காசிக்கு சாமான் வாங்கி சமைச்சு சாப்பிடக் குள்ள பின்னேரமாகிப் பொழுதும் மங்கிற்று. இனி ஒருத்தரும் 'வெளியில வெளிக்கிட ஏலா. பக்கத்தில வீட்ட கூடப் போகேலா. வீட்டுக்குள்ளயே இருக்கிறதுதான் எல்லாரும் நேரத்தோடயே படுத்திருவம். படுத்தாலும் உடன நித்திரைக்குப் போக ஏலா. ஒரே அவனுகளின்ர சப்பாத்துச் சத்தம் கேக்கும் வீடு றோட்டுக்குப் பக்கத்தில இருக்கிறதால எங்கட நெஞ்சில நடக்கிறமாதிரி பயங்கரமாக் கேக்கும். நான் காதுக்குள்ள பஞ்சு வைச்சுக்கொண்டு தான் படுக்கிற, இல்லாட்டி நித்திரை கொள்ள ஏலா.

எனக்கு வெளியில போக வேணும் போல இருக்கு. ஆனா வெளியில ஒரே இருட்டாயிருக்கு. அதோட அவனுகள் நிண்டாலும் நிப்பானுகள். வெளியில போகப் பயமாயிருக்கு. அதால பேசாமப் படுத்திற்றன். இருட்டு விடியத் தானே வேணும். □□



# அழைப்பு

அறிவுக்குமரன்

போருக்கு வாவென
எதிரி ஏவும் செல்கூட
போர் முரசாய் கேட்கையிலே

புலி தாவும் எதிரி முகாம்
ஓசை கூட - பூபாள இசையாய்
எழு என்று ஒலிக்கையிலே

குப்புறக் கிடந்து
கொட்டாவி விடாதே
கெலிபார்க்கும் குறிகூட - உன்
முள்ளந்தண்டுக்கும் முளைக்குமே

பாரில் தமிழ் அரசமைக்க
முரசறையும் சிறீசோடு
நீயும் அணி சேரு
புலியாக உருவாகு. □□

www.tamilarangam.net



# உடையாத விலங்குகள்

ADELE ANN அடேல் ஆன்

உடையாத விலங்குகள் (UNBROKEN CHAINS) என்ற தலைப்பில் யாழ்ப்பாண சமூகத்தில் நிலவும் சீதன முறைமைபற்றி அடேல் ஆன் எழுதிய ஆங்கில நூல் சமீபத்தில வெளியாகியிருக்கிறது. இந்த நூலின் தமிழாக்கம் தொடர் கட்டுரைகளாக 'வெளிச்சத்தில்' பிரசுரமாகும் என்ற நல்ல செய்தியை 'வெளிச்சம்' வாசகர்களுக்கு அறியத்தருகிறோம். தமிழாக்கத்தின் முதற் பகுதியை இவ்விதழ் தாங்கிவருகிறது.

## முன்னுரை:

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மிகவும் சிக்கலான சமூகப் பிரச்சனைகளில் ஒன்றான சீதன முறைமைபற்றி இந்தச் சிறிய நூல் ஆராய விழைகிறது. யாழ்ப்பாண சமூகத்தில் பெண்களுக்கு சீதனம் கொடுக்கும் சமூக வழக்க நடைமுறையானது தனக்கே உரித்தான தனிப்பண்புகளையும் தனித்துவமான வரலாற்றையும் கொண்டது. மேலோட்டமாகப் பார்த்தால், திருமணத்தின்போது பெண்களுக்கு சொத்துடைமை வழங்கும் மிகவும் சாதாரணமான, எளிமையான பழக்கமாகவே இது தென்படும். இது ஒரு வெளித்தோற்றப்பாடு மட்டுமே. பண்பாட்டுப் பனிமலையின் மிதக்கும் சிகரம்போன்ற ஒரு தோற்றப்பாடு. ஆனால் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் இந்தப் பிரச்சனையின் பரிமாணம் சிக்கலானது. பல்வேறு சமூக - பண்பாட்டு உறவுகளும், பிரச்சனைகளும் பின்னிப் பிணைந்த மிகவும் சிக்கலான வழக்குமுறையாக இதனைக் காணலாம்.



நூலாசிரியை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ்ப்பாண சமூகக் கட்டமைப்பில் நடப்பியலாகவுள்ள சீதன முறைமைபற்றிய எமது ஆய்வு ஒரு விடயத்தை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அதாவது இந்த நடைமுறையானது வரலாற்றுப் பழைமையில் ஆழமாக வேர் பதித்து நிற்கிறது என்பதையும், சமூகத்தில் பலமாக நிறுவனமயப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் இலகுவில் வளைந்துகொடாத இறுக்கமான தன்மையைக் கொண்டது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

புறவயமான ஒரு சமூகப் பண்பாட்டு மெய்மை என்பதால் சீதன முறைமையை ஒரு சமூக வரலாற்று ஆய்வுக்கு உட்படுத்துவது சாத்தியமானது. எனினும், எமது ஆராய்ச்சி இந்தப் பிரச்சனை சம்பந்தமான ஒரு முழுமையான சமூக, வரலாற்று ரீதியான விஞ்ஞான நுண்ணாய்வை தந்திருப்பதாக நாம் கூறவில்லை. சீதன முறைமையில் பிணைந்து நிற்கும் சமூகப் பண்பாட்டுக் கூறுகளையும் வரலாற்று அம்சங்களையும் பரிசீலனை செய்து, இந்த நடைமுறையின் வரலாற்றுத் தோற்றுவாய்களையும் இதன் அடிப்படையில் எழுந்து நிற்கும் சமூக உறவுகளையும், இதன் சமூக இயங்கியல்புகளையும் பிட்டுக்காட்டுவதே இந்தச் சுருக்கமான படைப்பின் பிரதான நோக்கமாகும். சீதன நடைமுறையானது, பெண்களுக்கு எதிரான ஒரு ஒடுக்குமுறை வடிவம் என்பதையும், தமிழ்ப் பெண்களின் வாழ்வுநிலையில் இது பாரதூரமான விளைவுகளை உண்டுபண்ணியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுவதே இந்த நூலின் மையக்கருத்தாகும்.

இந்த நூலின் முதற்பகுதி, யாழ்ப்பாண மக்களின் மரபுவழிச் சட்டமான தேச வழமைச் சட்டத்தொகுப்பை ஆய்வுசெய்கிறது. சீதன முறைமை தங்குநிலை கொண்டிருக்கும் சொத்துடைமை விதிகளையும், சொத்துடைமை உறவுகளையும் அலசிப்பார்ப்பதற்கு இது அவசியம். சாராம்சத்தில், தேசவழமை விதிகளானது யாழ்ப்பாண மக்களின் மரபுவழிவந்த சொத்துடைமைச்சட்டங்களாகும். தேசவழமையில் தனித்துவச் சிறப்புடையதாக விளங்குவதுதாய்வழிச் சொத்துடைமை முறைமையாகும். இதன் முக்கிய அங்கமாக சீதன சொத்துடைமை அமையப்பெற்றிருக்கிறது.

சீதன சொத்துடைமை பற்றிய எமது ஆய்வு ஒரு விடயத்தை விவாதத்திற்கு எடுத்திருக்கிறது. அதாவது தேசவழமைச் சட்டமானது, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பெண்களின் சொத்துரிமைக்கு பாதுகாப்பு அளிக்கிறது. ஆயினும் அதேவேளை, பெண்களின் சொத்துக்களை நிர்வகித்து கட்டுப்படுத்தும் மேலாண்மை அதிகாரத்தை ஆண்களுக்கு வழங்குகிறது. இது தேசவழமைச் சட்டத்திலுள்ள ஒரு குறைபாடு என்பதை சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

தாய்வழிச் சொத்துடைமையின் தோற்றுவாயானது,தேசவழமைச் சட்டம் தொகுக்கப்பட்ட முன்னூறு ஆண்டுகளுக்கு அப்பாலான ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டது. யாழ்ப்பாண சமூகத்தில் நிலவும் சீதன வழக்கும்,தாய்வழிச் சொத்துடைமை முறைமையும் ஒரு திராவிட தாய்வழிச் சமூகத்திலிருந்து தோற்றம் கொண்டதாகவும், இச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் பத்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் தென்மேற்கு இந்திய பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் வந்து குடியேறினர் என்றும் ஆய்வாளர் கூறுவர். இந்த மக்களை, மலாபார்வாசிகள் என காலனித்துவ ஆட்சியாளர் குறிப்பிட்டுள்ளனர். ஆயினும்,இவர்கள் பூர்வீகத்தில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த திராவிடத் தமிழர்களாவர். இம் மக்களது மரபுவழிச் சட்டமான மருமக்கள் தாயம் இவர்களது சொத்துடைமை உறவுகள்பற்றி விபரிக்கிறது. தேசவழமைச்சட்டத்தில் காணப்படும் தாய்வழிச் சொத்து பராதீனப்படுத்தும் முறை, மருமக்கள் தாயம் சட்டத்திலுள்ள சொத்துடைமை முறைமைக்கு ஒப்பானது என ஒரு தமிழ் அறிஞர் வாதிடுகிறார். திருமணத்தின்போது பெண்ணுக்குப் பெற்றோர் புதிதாக ஒருதனி இல்லம் அமைத்துக்கொடுக்கும் யாழ்ப்பாண

www.tamilarangam.net



சமூக வழக்கானது, கேரள சமூகத்தில் நில விய 'தாய்வழி இல்லம்' மரபிலிருந்து பெறப் பட்டதாக இந்த அறிஞர் கூறுகிறார். மிக வும் நம்பத்தகுந்த முறையில் இந்தக் கோட் பாடு முன்வைக்கப்பட்ட போதும் இதில் கேள்விக்குரிய அம்சங்களும் இருப்பதாகவே நாம் கருதுகிறோம். முதற் பகுதியின் முடிவு ரையில் தேசவழமைச் சட்டத்தில் பொதிந் திருக்கும் ஆணாதிக்க கருத்து நிலையையும் யாழ்ப்பாண பெண் சமூகத்திற்கு அது விளை விக்கும் பாதிப்புகளையும் விமர்சிக்கிறோம்.

சீதன வழக்கில், சமகாலத்தில் புகுத் தப்பட்டுள்ள புதிய நடைமுறைகள் பற்றி யும், அவை தமிழ்ப் பெண்களின் சமூக வாழ் நிலையில் எவ்விதமான பாதிப்புகளை ஏற் படுத்துகிறது என்பது பற்றியும்இரண்டாவது அத்தியாயத்தில் பரிசீலனை செய்கிறோம். சீதன நடைமுறையின் தற்காலப் பிறழ்ச் சிப் போக்குகள் பற்றி இப்பகுதியில் விபரித் துக் கூறப்படுகிறது. அரச ஒடுக்குமுறையும், அதனால் விளைந்த புறநிலைகளும் சீதனப் பிரச்சனையை மேலும் சிக்கலாக்கி மோச மடையச் செய்துள்ளது என்பதையும் சுட் டிக்காட்டுகிறோம்.

இந்தப் பகுதியில், பேச்சுத் திருமணமு றையை நாம்குறைகண்டு விமர்சிக்கிறோம். பேச்சுத் திருமண முறையானது சொத்து டைமை உறவுகளை பேணிப்பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது; பெண்களின் சமூக வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் முட் டுக்கட்டையாக அமைந்துள்ளது; இந்த ஒழுங்குமுறையில் பிற்போக்கான கருத்தி யல் அம்சங்கள் ஊடுருவி நிற்கிறது, என்ப தையும் சுட்டிக்காட்டுகிறோம்.

சீதன முறைமையிலுள்ள இறுக்கமான, வளைந்துகொடாத பண்பாட்டு ஆதிக்கமா னது பெண்களின் வாழ்வுநிலையை நிர்ண யித்துவிடும் சக்தி வாய்ந்ததாக விளங்குகி றது. கல்வியும், தொழில்வாய்ப்பும், அந்தஸ் துடைய உயர்பதவிநிலைப் பெண்கள் கூட இந்த சமூக சம்பிரதாயத்தின் மேலாதிக் கத்திற்கு பணிந்துபோக நிர்ப்பந்திக்கப்படு கிறார்கள்.

பெண்களின் வீட்டுத்தொழில் பற்றியும் இந்த அத்தியாயத்தில் நாம் பரிசீலனை செய்கிறோம். வீட்டுத் தொழிலுக்கும சீத னத்திற்கும் மத்தியிலான தொடர்புபற்றி யும் ஆராய்கிறோம். இறுதியாக, பெண்க ளின் தங்குநிலைபற்றியும், வளர்ச்சிக்கு குந் தகமாக நின்று பெண்களை அது முடக்கி வைத்திருக்கும் தன்மைபற்றியும் விளக்குகி றோம்.

இந்தப் பாரிய சமூகப் பிரச்சனைக்கு ஒரு தீர்வாக பெண்களின் சொத்து உரிமை களை மேலும் பாதுகாத்து பலப்படுத்த சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென முடிவுரையில் நாம் பரிந்துரை வழங்குகிறோம். அத்தோடு பெண்களின் சமூக மேம்பாட்டை இலக்காகக் கொண்ட பலதரப்பட்ட சமூக -பொருளாதாரத்திட்டங் கள் செயற்படுத்தப்படவேண்டும் எனவும் நாம் கருத்துக்கூறுகிறோம்.

பொதுவாக நோக்குமிடத்து, சீதன முறைமையானது பெண் அடிமைத்தனத்தின் ஒரு உடையாத விலங்கு எனக்கொள்ளலாம். பெண் ஒடுக்குமுறைக்கு முண்டுகொடுத்து நிற்கும் சமூக உறவுகளின் சங்கிலிப் பிணைப் பில் இது ஒரு உடையாத விலங்கு.

**— தொடரும்**

(அடுத்த இதழில், ''தேசவழமைச் சட்டமும் தாய்வழிச் சொத்தும்'' என்றதலைப்பிலான, நூலின் முதல் அத்தியாயத்தின் ஒரு பகுதியை மொழிபெயர்த்துத் தருகிறோம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# நேர்காணல்

**பேராசிரியர்**
**அ. சண்முகதாஸ்**

**நேர்முகம்**
**கருணாகரன்**

*திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவராகப் பணி புரிகின்றார். ஆங்கிலம், சமஸ்கிருதம், சிங்களம், யப்பான் போன்ற பலமொழிப் புலமை உடைய இவர், இவரது மனைவியாரான மனோன்மணி அவர்களுடன் இணைந்து மொழி ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். பழந்தமிழ்ப் பனுவல்களோடு நவீன கலை, இலக்கியங்களுடனும் மிகுந்த ஈடுபாடும் பரிச்சயமும் கொண்டு அறிவு சார் தளத்தில் இவர் ஆற்றி வரும் பங்களிப்பு அதிகம். தமிழீழப் போராட்டத்தை நெஞ்சார நேசித்து, அதன் வெற்றிக்கும்; மலரும் தமிழீழத்தின் கல்விக்கான அத்திவாரத்தை அமைப்பதிலும் இவர் காட்டி வரும் ஆர்வமும் பங்களிப்பும் பாராட்டப்பட வேண்டியது. நாட்டாரியலில் அதிக ஆர்வம் கொண்டு இயங்கும் இவர், நல்ல நடிகராகவும் பாடகராகவும் கலைத்துறையின் பல கூறுகளுடனும் தன்னை இனங்காட்டியுள்ளார். அறிவு சார் புலத்தில் இருந்து இந்த மண்ணை நேசிக்கும் பலரில் இவர் விதந்துரைக்கக் கூடியவர்.*

● இன்று பேராசிரியராகவும் யாழ்-பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் கல்விமானாகவும் உயர்ச்சி கண்டுள்ள தங்களின் இளமைக்காலம், தொடர்ந்த வாழ்க்கை, குடும்பப்புலம், வளர்ச்சிப் படிமுறைபற்றிச் சொல்லுங்கள்:

☐ திருக்கோணமலையில் ஓர் ஏழைத் தொழிலாளக் குடும்பத்திலே இரண்டாவது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மகனாகப் பிறந்தேன். அங்குள்ள
புனித சவேரியார் கத்தோலிக்க
தமிழ்க்கலவன் பாடசாலையிலே
தொடக்கக் கல்வி பெற்றேன்.
எனக்குத் தொடக்கக் கல்வி
கற்பித்தவர்களுள் ஒருவர் ஈழத்துப்பெண்
ஆக்க இலக்கியகாரர்களுள்
ஒருவரான திருமதி பாலேஸ்வரி
நல்லரட்ணசிங்கம்.
என்னுடைய பத்தாவது வயதில்
5 ஆம் வகுப்புப் புலமைப்பரிசில் பெற்று
மட்டக்களப்பு வந்தாறுமூலை
மத்தியமகாவித்தியாலயத்திற்
படிக்கச் சென்றேன். தனியாகத்
திருக்கோணமலையிலிருந்து
மட்டக்களப்புக்குப் பயணஞ்செய்த
அனுபவம் என் மனத்தில்
இன்றும் நினைவிலிருக்கிறது.
வந்தாறுமூலை மத்திய மகா
வித்தியாலயத்தில் சிரேஷ்ட கல்வித்
தராதரத் தேர்வு முதற்பிரிவிலே
தேர்ச்சியடைந்தேன். ஆனால்,
தொடர்ந்து கற்க பணவசதியின்மையால்
திருக்கோணமலை பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கத்தில் ஓர்
எழுதுவினைஞர் பணியினைப் பெற
விரும்பினேன். அவ்வேளையில்,
எதிர்பாராதவிதமாக இராமகிருஷ்ணமிசன்
புலமைப்பரிசில் திட்டத்தினடிப்படையில்
மட்டக்களப்பு கல்லடி
உப்போடையிலுள்ள சிவாநந்த
வித்தியாலயத்திலே என்னுடைய
உயர் கல்வித் தராதரப் படிப்பினைத்
தொடரும் வாய்ப்பு ஏற்பட்டது.
அங்குதான் ''எளிமையான வாழ்வு
உயர்வான எண்ணம்'' என்னும்
குறிக்கோள் மொழிக்குரிய
வாழ்வினை வாழும் வாய்ப்புக்கிடைத்தது.
பல பெற்றோரை இழந்த மாணவர்களுடன்
வாழுகின்ற வாய்ப்பு. சிறிய
மாணவர்களைப் பார்க்கின்ற வாய்ப்பு.
இரண்டு வேட்டிகளுடனும்
இரண்டு மேலுடைகளுடனும்
வாழ்கின்ற வாய்ப்பு. உணவை நாமே
பகிர்ந்து உண்ணும் வாய்ப்பு.
ஒரு நல்ல சந்நியாசியாகிய நடராஜானந்தாஜீ
யினுடைய வழிகாட்டலிலும்,
வித்தியாலய அதிபரும் மட்டக்களப்பிலே
எல்லோருக்கும் நன்கு
தெரிந்தவருமாகிய
திரு. க. கணபதிப்பிள்ளை,
பண்டிதர் வி. சீ. கந்தையா,
சிவசிறீ பூ.தியாகராஜ ஐயர் ஆகியோருடைய
வழிகாட்டலிலும் வாழும் வாய்ப்பு.
இவற்றுக்கு மேலாக,

வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு வாய்த்த
மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார்
வேண்டுவது

என்றும் ''நாட்டவிழி நெய்தலடி
நாயகனார் வேண்டுவது'' என்றும்
''கூப்பியகைக் காந்தளடி
கோமகனார் வேண்டுவது''
என்றும் முத்தமிழ் வித்தகர்
விபுலாநந்த அடிகளார் தந்த
பாடல்களை ஒவ்வொருநாளும் பாடுவது
மட்டுமன்றி, அப்பாடல்கள் உணர்த்தும்
பணிவினை நடைமுறை
வாழ்வாகக் கொள்ளும் வாய்ப்பும்
ஏற்பட்டது.

● பழந்தமிழர் இலக்கியங்களிலும் வளர்ந்துவரும் நவீன இலக்கியங்களுடனும் தொடர்ந்த உறவுகொண்டுள்ள தாங்கள், இன்றைய புதிய படைப்புகளை பழந்தமிழர் இலக்கியத்திற்கு ஈடாக வளர்ச்சி கொள்ளுகின்றனவென நீங்கள் கருதுகிறீர்களா? கருதுவதானால் அதற்குரிய சான்றுகளைத் தாருங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



☐ பழந்தமிழர் இலக்கியங்களுக்கும் நவீன இலக்கியங்களுக்குமிடையே ஒரு குறிப்பிட்ட வேறுபாடு உண்டு. பெரும்பாலான சிறப்புற்ற தமிழிலக்கியங்கள் முழுமையான வாழ்வுக்கு வழிகாட்டுவனவாயமைந்தன. இல்லாவிட்டால், திருக்குறளை இன்னும் படிப்போமா? சிலப்பதிகாரம் போன்ற இலக்கியம் காலத்தை வென்று நிற்கின்றது. நவீன தமிழ் இலக்கியங்கள் வாழ்வின் ஒரு பக்கப் பார்வைகளாகவே உள்ளன. காதல் என்றால் காதலைப்பற்றியே பாடுதல், போர் என்றால் போரை மட்டுமே பாடுதல் போன்ற செயற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

● **அன்றைய வாழ்வு, அனுபவம், சிந்தனை என்பவற்றுக்கும் இன்றைய வாழ்வு, அனுபவம், சிந்தனை என்பவற்றுக்கும் வித்தியாசமுண்டு. இன்றைய கலை, இலக்கியங்கள் வேறுபட்ட பார்வைகளுடனும் ஆழ்ந்தஉணர்வுத்தளத்திலும்வெளிப்படுகின்றனவே! இது பற்றி உங்கள் கருத்தென்ன?**

☐ அன்றைய வாழ்வு, அனுபவம் என்பவற்றுக்கும் இன்றைய வாழ்வு, அனுபவம் என்பவற்றுக்குமிடையே நிறைய வேறுபாடுண்டு என்பதிலே இரண்டு வகையான கருத்து இருக்க முடியாது. இந்த வகையில் இன்றைய கலை இலக்கியங்கள் வேறுபட்ட பார்வைகளுடன் அமைகின்றன என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். மலரவனின் "போர் உலா" என்னும் நாவல் போன்று ஓர் இலக்கியம் தமிழிலக்கிய வரலாற்றிலே முன்னெக்காலத்திலுமே எழுந்திருக்க முடியாது. இன்றையப் போராட்டகாலக் கவிதைகள் போல் முன்னெப்பொழுதும் கவிதைகள் எழுந்திருக்கமாட்டா. ஆனால், அதே வேளையில் இன்றைய இலக்கியப் படைப்பாளிகளிலே கணிசமானவர் ஒரு 'தீட்டு' மனப்பான்மையுடன் இருப்பதையும் நாம் காண்கிறோம். உண்மையாக நடப்பனவற்றைக் கண்டாலும், அவற்றைத் தம் படைப்புக்களிலே தீட்டுதற்கு மனம் ஒவ்வாது ஒதுங்குகின்றனர். இப்படி நான் கூறுவதாலே இன்றைய



புதிய படைப்புகள் தரம் குறைந்துள்ளன என்று கூறவில்லை. பழந்தமிழ் இலக்கியங்களைச் சுவைப்பது போலவே புதிய இலக்கியங்களையும் சுவைப்பவன். ஆனால், மிகச் சிறந்த புதிய படைப்பாளர்கள் உள்ள இக்காலத்திலே ஏன் ஒரு பெரிய உலகப்புகழ் பெறக்கூடிய இலக்கியம் எழவில்லை என்பதுதான் விளங்கவில்லை. இதைப்பற்றி எண்ணி, என்ன காரணிகள் என்றெல்லாம் நினைக்கும் போதுதான், நான் மேற்கூறிய சிற்சில போக்குகள் என் மனதிலே பட்டன. அவற்றைக் கூறியுள்ளேன்.

www.tamilarangam.net



● அண்மைக்காலங்களில் தமிழர் பகுதிப் பல்கலைக்கழகங்கள் அறிஞர்களை உருவாக்குவதிலும் பார்க்கப் பத்திரம் வாங்கும் பட்டதாரிகளையே உருவாக்குகின்றன என்ற குற்றச்சாட்டு உண்டு. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

☐ தமிழர் பகுதிப் பல்கலைக்கழகங்களுக்கு இப்பொழுது வரும் மாணவர்கள் வாழ்க்கைக்கெனக் கல்வி கற்று வருபவர்களல்ல. சமூக உயர்நிலைக்கேற்ற பட்டம் பெறவேண்டுமென எல்லோரும் எண்ணுகின்றனர். ஆனால், எல்லோருக்கும் அந்த வாய்ப்பு இல்லை. இதனால், பெரும் போட்டி ஏற்பட, கல்லூரி ஆசிரியர்களை விடத் தனியார் கல்வி நிறுவனங்கள் இப்போட்டிக்குச் சுருக்க வழிகள் காட்ட, இத்தகைய பயிற்சியுடனேயே இம்மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு வருகிறார்கள். இங்கும் பட்டம் பெற்றால் போதும் என்ற மனநிலையே பெரும்பாலும் நிலவுகின்றது. பல்கலைக்கழகக் கற்றல், கற்பித்தல், ஆய்வு என்பன வெறுமனே பட்டத்துக்கும், பதவி உயர்வுக்குமென எண்ணும் நிலை மாறவேண்டும். அறிவு வளர்ச்சிக்கெனக் கற்றலும், கற்பித்தலும், ஆய்வும் நடப்பதற்கு எம்முடைய கல்விமுறை நிலை மாறவேண்டும்.

● இந்த மாற்றம் எவ்வாறு சாத்தியப்படும்?

☐ பல்கலைக்கழக கல்விக்கு ஈடான அதே தகுதியும் ஊதியமும் தரக்கூடிய தொழிற்கல்வி நிறுவனங்கள் ஏற்பட வேண்டும். அத்துடன், பல்கலைக்கழகத்துக்கென ஒரு போட்டித்தேர்வு நடைபெறும் நிலை மாறவேண்டும். குறைந்த அளவு (தற்போது இங்கு 180) புள்ளிகள் பெற்ற ஒவ்வொருவரும் பட்டதாரியாக விரும்பினால், அதற்கேற்ற வசதிகளை அளிக்கவேண்டும். இந்நிலைகள் ஏற்பட்டால், படிப்புக்கும் குறுக்குவழிகள் தேடும் நிலைமாறி படிப்பினை மேலும் மேலும் வளர்த்துச் செல்லும் நிலை உருவாகும்.

● பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவர்கள் வெறுமனே பல்கலைக்கழகப் பீடாதிபதிகள் மட்டும் அல்லாமல் வெளிச்சமூகத்துடனும், மொழியுடனும், எம்மண்ணில் எழுந்து வரும் கலை, இலக்கியங்களுடனும் நிறையத் தொடர்பு கொண்டவர்கள். தங்களை இலக்கியப்படைப்பாளிகளாகவும் இனங்காட்டிக் கொண்டவர்கள். ஆனால்,இந்தப் பட்டியல் அடுத்தவாரிசுகளின்றி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இது பற்றி உங்கள் கருத்தென்ன?

☐ தாங்கள் குறிப்பிட்ட மூவரிடமும் கல்வி கற்ற அடுத்த தலைமுறையைச் சார்ந்தவர்களெனப் பேராசிரியர் இ. பாலசுந்தரம், கலாநிதி சி. மௌனகுரு, கலாநிதி நா.சுப்பிரமணியன் ஆகிய மூவரையும் குறிப்பிடலாம். ஏனெனில் இவர்கள் மூவருமே பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகிய இருவரிடமும் கற்றவர்கள். இம்மூவருள் பேராசிரியர் பாலசுந்தரமும் கலாநிதி மௌனகுருவும் நாட்டாரியல், நாடகவியல் மூலமாக சமுகத்துடன் தொடர்பு கொண்டவர்களாயுள்ளனர்.

www.tamilarangam.net



**● ஒரு வளர்ச்சிப் போக்கில் இது திருப்தியளிக்கக்கூடியதா?**

☐ இந்நிலை மிகவும் 'விரும்பத்தக்கநிலை என்று நான் குறிப்பிடமாட்டேன். பெருத்தொகையான மாணவர்கள் கற்றுச்செல்லும் நிலையிலே மூன்று பெயர்களை மட்டும் குறிப்பிட்டுக் கூறும் நிலை மிகவும் விரும்பக் கூடியதொன்றல்ல. ஆழமான ஆய்வு செய்யவேண்டும் என்னும் விரும்பம்



இல்லாமல், விரைவிலே ஓர் ஆய்வுக்கட்டுரையை எழுதிப்பட்டம் பெற்றுப் பதவி உயர்வும் பெற்றுவிடவேண்டும் என்னும் எண்ணமே தற்காலத்திலே பெருவழக்காயுள்ளது. தான் கற்றதை மற்றவர்களுக்கு அறிவூட்டத்துடன் சொல்லவேண்டும் என்ற ஆவலும் சிலரிடம் இல்லை. ஆனால், இந்நிலைகளை மாற்றியமைத்து ஒரு புதிய பரம்பரையை உருவாக்கும் வாய்ப்பு இப்பொழுது கிடைத்துள்ளது. வடலி வளர்த்துத்தான் பனங்கிழங்கு சாப்பிடவேண்டும் இப்படியொரு பரம்பரையை உருவாக்காவிட்டால் எங்களைத்தான் தமிழ்ச்சமூகம் நாளைக்குக் குறைகூறும். அக்குறை வராமல் என் பணியை ஆற்ற வேண்டுமென எண்ணுகிறேன்.

**● ஆக்க இலக்கியப் படைப்பாளர்கள் உற்பத்தியாளராகவும், பல்கலைக் கழக அறிஞர்கள் பாவனையாளர்களாகவும் மாறிவருவதை நீங்கள் அவதானிக்க இல்லையா? இந்த நிலை ஏற்பட்டதற்கு என்ன காரணம்?**

☐ ஆக்க இலக்கியப் படைப்பாளர்கள் உற்பத்தியாளராகவும் பல்கலைக்கழக அறிஞர்கள் நுகர்வோர்களாகவும் மாறிவரும் நிலை என்பது உண்மையேயாகும். இலக்கியங்களைப் படித்து அவற்றிடையே காணப்படும் குறைகளையும் நிறைகளையும் மாணவர்களுக்கு கூறவேண்டியது பல்கலைக்கழக அறிஞர்களுடைய பாரிய பொறுப்பாகும். இந்த வகையிலே அவர்கள் ஆக்க இலக்கிய நுகர்வோர்களாக இருப்பது தவிர்க்க முடியாததாகும். இன்னொரு வகையிலே பார்க்குமிடத்துப் பல்கலைக்கழக அறிஞர்களிடையே ஆக்க இலக்கியப்படைப்பாளர்கள் மிகவும் அருகியே காணப்படுகின்றனர். பல்கலைக்கழக அறிஞர்கள் எல்லோரும் ஆக்க இலக்கியப் படைப்பாளிகளாக இருக்கவேண்டுமென எவரும் எதிர்பார்க்கமாட்டார்களென எண்ணுகிறேன். எனினும், இலக்கியம், தமிழர் பண்பாடு, நாட்டார் வழக்கியல் போன்றவற்றைப் பயிற்றும் தமிழ்த்துறையைச் சார்ந்தவர்கள் ஆக்க இலக்கியப் படைப்பாளிகளாகவும் இருந்தால்,

www.tamilarangam.net



அவர்களுடைய கற்பித்தலிலே ஒரு புதிய பரிமாணம் இருக்கும் என்பதிலே ஐயமில்லை.

● **தொழிலாளர்களிடமிருந்தும் விவசாயிகளிடமிருந்தும் போராளிகளிடமிருந்தும் சமுகத்தின் பிறமட்டங்களிலிருந்தும் எழுத்தாளர்கள், கவிஞர்கள் தோன்றிய அளவுக்கு அறிஞர்கள் எனப்படுபவர்களிடமிருந்து ஏன் ஆக்க இலக்கியப்படைப்பாளிகள் அதிகம் உருவாகவில்லை?**

☐ அறிஞர்கள் ஆக்கப்பட்ட இலக்கியங்களை விமர்சிக்கின்றனர். தத்தமக்கேற்றபடி விமரிசன அளவுகோல்களைப் பயன்படுத்தி இலக்கியங்களை மதிப்பிடுகின்றனர். இவ்வாறு பிறருடைய இலக்கியங்களின் குறை நிறைகளை மதிப்பீடு செய்யும் அறிஞர்கள் தாம் தற்செயலாக இலக்கியம் படைத்தால் மற்றவர்கள் குறை காணாதபடி படைக்கவேண்டுமென்ற எண்ணமுடையவராயிருப்பது வியப்புக்குரியதல்ல இதனால் அறிஞர்கள் பெரும்பாலும் ஆக்க இலக்கியத்துறையிலே ஈடுபாடு இல்லாதாராயினர்.

● **தமிழ்மொழியின் தூய்மை என்ற குரல் நவீன உலகத்திலிருந்து எம் மொழியை அந்நியப்படுத்திவிடும் என்ற கருத்துப்பற்றி மொழியியல் பேராசிரியர் என்ற வகையில் உங்கள் கருத்து என்ன?**

☐ தமிழ்மொழியின் தூய்மை என்ற குரல் பிழையாக விளங்கப்பட்டுள்ளது.
(1) பிறமொழியாளர்கள் தம்முடைய மொழிகளைப் பேசும் போது பிறமொழிச் சொற்களைப் பெரும்பாலும் பயன்படுத்திப் பேசுவதில்லை. ஆனால், நாங்கள் ஒரு தொடரில் மட்டும் எத்தனை பிறமொழிச்சொற்களைப் பெய்து பேசுகின்றோம். அப்பிறமொழிச் சொற்களுக்கு ஈடாகத் தமிழ்ச்சொற்கள் இருக்கின்றன. இத்தகைய இடங்களிலே தமிழ்மொழிச் சொற்களைப் பயன்படுத்தித் தமிழ்மொழியின் தூய்மையைப் பேணலாமல்லவா? இதனால் தமிழ்மொழி உலகிலே அந்நியப்படுத்தப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை.
(2) எழுத்து மொழியிலே பொருத்தமான தமிழ்ச்சொற்கள் இருக்க பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்த வேண்டுமா? சில இடங்களிலே பிறமொழிச் சொற்களைப் பிழையான பொருளிலே நாம் கையாளுகின்றோம். எம்மிடம் சொற்கள் இருக்கப் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தும் பழக்கத்தினை மாற்றுங்கள் என்பதும் தமிழ்மொழியின் தூய்மை என்ற குரலின் ஒரு பகுதியாகும்.
(3) அடுத்த நூற்றாண்டிலே இன்னுஞ்சில ஆண்டுகளிலே - காலடி வைக்கப் போகின்றோம். நவீன தொழில்நுட்ப, அறிவியல் வளர்ச்சிகள் இன்னும் வேகமாக நடைபெறவுள்ளன. இவ்வளர்ச்சிக்கு எம்முடைய மொழி முகங்கொடுக்குமா என்று சிலர் அச்சமடைகின்றனர். அப்படி அஞ்சவேண்டியதில்லை. தொழில்நுட்ப, அறிவியற் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்களை ஆக்கிக்கொள்வதற்குத் தமிழ்மொழியிலே ஏற்ற வளமுண்டு. அண்மையிலே, யாழ்.பல்கலைக்கழகக் கலைச்சொற் குழுவினர் கணனி அறிவியலுக்குரிய கலைச்சொற்களை ஆக்கி வெளியிட்டுள்ளனர் இன்று வெளிவரும் பொறுப்பாள்கை அறிவிப்புகள், வேண்டுகைகள் போன்றன தூயதமிழ்மொழிச் சொற்களிலே அமைகின்றன. நவீன வசதிகளை

www.tamilarangam.net



பழமொழிகள், விடுகதைகள் ஆகியன பயன்படுத்தபட்டமையேயாகும் பெரும்பாலான அவருடைய நாடகக் கதைகளே நாட்டார் கதைகளாகவே அமைகின்றன. மக்களுக்கு நன்கு விளங்கும் அக்கதைகளை இக்கால நிலைமையுடன் இணைத்துக் கூறும்போது அவை எளிமையும், சிறப்பும், சுவையும் பெற்றுவிடுகின்றன.

● ஒரு இனம் தன் விடுதலைக்காக நடத்தும் போராட்டத்துக்கும் அவ்வி னத்தின் கல்விமான்களுக்கும் எத்தகைய உறவு இருக்க வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?

❑ ஓர் இனம் விடுதலைப் போராட்டம் நடத்தும்போது, அவ்வினம் முழுவதுமே உடலாலும் உளத்தாலும் அதற்குத் துணைசெய்ய வேண்டும். கல்விமான்கள் உடலாலே தம்முடைய பங்களிப்பைச் செய்ய முடியாவிட்டால், உள்ளத்தாலே செய்யலாம். விடுதலைப் போராளிகளின் அறிவுக்கருவியாக அவர்கள் பயன்படலாம்.

❑ ❑ ❑

மதிப்பீட்டுரை

# "இன்னும் ஒரு நாடு இன்னும் ஒரு....:"

## இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

❑

01.10.1994 ம் திகதி சனிக்கிழமை இரவு 7.00 மணிக்குத்தான் படம் ஆரம் பித்தது. இரவு 8 10 க்கு என்னவோ படம் முடிந்தது. சனக்கூட்டத்தினூடாக ஊர்ந்து ஊர்ந்து வெளியே வர, முல்லை மாவட்டக்கலை பண்பாட்டுக்கழகப் பொறுப் பாளர் சங்கரண்ணர் எதிர்பட்டார். அவருக் குக் கை கொடுத்து மகிழ்ந்து இயக்குனர் தாசனை தேடிக்கொண்டு கைலாசபதி அரங் கினை விட்டு வெளியே வந்தால் வெளியே மழை. மழையில் நனைந்தபடி மோட்டார் சைக்கிளைத் தேடத் தொடங்க கூட வந்த ஏழு வயது மகன் கேட்டான்.

"அப்பா கடைசியில செத்தது தளபதி தானே-"

❑❑

இன்னுமொரு நாடு படமாக இருந்தால் என்ன இதற்கு முன்னர் வெளியான தமி ழோசை, தாயகக்கனவு, காற்றுவெளி போன்றன படங்களாக இருந்தால் என்ன, ஒளிவீச்சில் வெளியான குறும் படங்களாக இருந்தால் என்ன எல்லாமே எங்கள் மண் ணின் தனித்தன்மைகளை வெளிப்படுத்து கின்றன.

www.tamilarangam.net



நாம் பெற்றுக் கொண்டோமேயாயின் உலகிலே வெளிவரும் கருத்துக்களை எம்முடைய மக்களுக்குப் பொருத்தமான தமிழ் மொழியிலே வழங்கமுடியும். இது தொடர்பான எண்ணங்கள் எம்மிடையே உருவாகிக்கொண்டு வருகின்றன. சில மாதங்களுக்கு முன்னர் மலேசியாவில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழாசிரியர் மாநாட்டின் கருப்பொருள் பின்வருமாறு அமைந்தது: 'தகவல் யுகத்தில் தமிழ் கற்றலும் கற்பித்தலும்' அறிவியல் தமிழ் பற்றி இப்பொழுது பலரும் எண்ணுகின்றனர்.

● மொழியின் வளர்ச்சி என்பதுடன் ஒரு சமூகத்தின் சுய அறிவியல் — தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் தொடர்புபட்டிருந்தாலே மொழிவளர்ச்சி உரிய சாத்தியப்பாட்டை அடைய முடியும் என நினைக்கின்றோம். இது பற்றி:

☐ இதனை எவருமே மறுத்துக் கூற முடியாது. எம்முடைய மண்ணிலே எம்முடைய மொழிபேசும் அறிவியலாளர்கள் புதிய அறிவியற் கண்டு பிடிப்புகளை செய்தார்களாயின் அவற்றுக்குத் தமிழ்ப் பெயர்களைக் கொடுக்கவும் அவற்றைத் தமிழ் மொழியில் எம்மக்களுக்கும் பிற மொழியில் உலகத்தவர்க்கும் கூறமுடியும். அப்பொழுது எம்முடைய மொழியிலே புதிய சொற்கள் புதிய சொற்றொடர்களெல்லாம் ஏற்படும். பிறநாட்டு அறிவியல் — தொழில்நுட்ப அறிவினை நாம் பெறும் பொழுது, அதற்கேற்ற தமிழ்ச்சொற்களை, தமிழ்ச் சொற்றொடர்களை ஆக்கும் போது தமிழ்மொழி வளர்ச்சியடையுமல்லவா?

● ஒரு சமூகத்தின் ஆன்மா அந்த மொழிகளில் எழும் வாய்மொழி இலக்கியங்களான நாட்டார் இலக்கியங்களிலேதான் அறியப்படும் எனும் கருத்தை நாட்டார் இயல் ஆய்வாளர் என்ற வகையில் எப்படி உறுதிப்படுத்துவீர்கள்?

☐ இதனை உறுதிப்படுத்துவதற்கு நான் காட்டக்கூடிய ஒரு நல்ல



எடுத்துக்காட்டு எங்களுடைய கூத்துக்கலை நவீன நாடக வடிவங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தினாலும், எங்களுடைய கூத்துக்கலையினை மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். நவீன நாடகங்களையும் இக் கூத்துக்கலை உத்திகள் சிலவற்றுடன் மேடையேற்றும் பொழுது அவை நல்ல வரவேற்பைப் பெறுகின்றன. குழந்தை சண்முகலிங்கத்தின் சிறுவர் நாடகங்கள் எல்லாமே வெற்றி பெறுவதற்குக் காரணம் அந்நாடகங்களிலே நாட்டார் பாடல் மெட்டுக்கள், நாட்டார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சினிமா என்கிற வலிமை மிக்க சாதனத்தை, காட்டுக்கத்தலாக, சர்க்கஸ்விளையாட்டுக்களாக, மூளை குழம்பியவர்களின் கூத்துக்களாக மாற்றாமல் உயிர்த்துடிப்புள்ள வெளிப்பாடாக நம்மவர்கள் பயன்படுத்தியுள்ளதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஒட்டுத்துணிகளில் உடைகளைத் தயாரித்து, வலிப்புக்காரர்களாக துடிப்பவர்களையும், முக்கிமுனகுபவர்களையும், படம் காட்டி கலை உலக 'மேதாவிகளாக மிளிரும் தமிழக சினிமா விற்பனர்களுக்கு போட்டுக் காட்ட வேண்டிய படங்களில் ஒன்று ''இன்னுமொரு நாடு''

□□□

நாட்டை மீட்பதற்கான போராட்டம் நடத்துபவர்களே அரச நிர்வாகிகளாக, நீதியாளர்களாக, இசைக்கலைஞர்களாக, ஓவியர்களாக, எழுத்தாளர்களாக, நடிகர்களாக தொழில்நுட்ப விற்பனர்களாக வளர்ச்சி பெற்று உயர்வுநிலைக்கு வந்து கொண்டிருக்கும் உன்னதம் மிக்க போராளிகளைக் கொண்டது எங்கள் மண் என்று பெருமைப்பட முடிகின்றது.

உலக சினிமா தரங்களையும், சிங்கள சினிமாக்களின் தரங்களையும் பற்றிப் பேசுபவர்கள் ஒன்றை மாத்திரம் புரிந்து கொள்ள வேண்டும். பொருண்மிய தடை உட்பட பல்வேறு தடைகளுக்கு மத்தியில் நாங்கள் நிமிர்ந்து நிற்பதே மிகப் பெரிய விடயமாகும்.

சகல வசதிகளும் எங்கள் கைகளில் வரும்போது சர்வதேச ரீதியாக எங்கள் படைப்புக்கள் முதன்மை பெறும். பரிசில்களையும் தட்டிக் கொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

□□□□

உடல் அசைவுக்கு ஏற்ப கமராவில் ஏற்படும் அசைவால் படமெடுப்பதில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கக்கூடிய ''ஸ்டடிகேம்'' கமரா என்றும், (உடம்போடு பொருத்தக் கூடியது) சிறிய ஹெலி கொப்ரரில் கமராவை பொருத்தி விட்டு 'ரிமோட் கொன்ரோலர்' மூலம் இயக்கக்கூடிய ''ஹெலிகேம்'' கமரா என்றும் சினிமா வளர்ச்சி பெற்று விட்ட நிலையிலும், கம்பியூட்டர் மூலம் உருவங்களை உருவாக்கி சாதனைகள் படைப்பதில் சினிமாக்கள் முன்னேறிவிட்ட போதும்.

ஒற்றைக் கமராவையும், நம்பிக்கையை வைத்துக் கொண்டு உருவாக்கி இருக்கும் இப்படம் தமிழீழ திரைப்பட வரலாற்றில் ஒரு திருப்பு முனை.

□□□□□

இப்படத்தில் குறைகள் இல்லையா என்று கேட்கலாம்? இப்போது அதுவல்ல பிரச்சனை. காலங்காலமாக அன்னிய இறக்குமதிச் சரக்குகளை பார்த்துப் பார்த்துப் புளித்துப்போன எங்களுக்குப் பல குறைபாடுகள் தெரியலாம்.

ஆனால் எங்கள் படங்களில் உள்ள உண்மையும், யதார்த்தமும். உயிர்த்துடிப்பும், அழகும் அற்புதமும் வேறு எங்கே கிடைக்கும்? சகல வளங்களும், வசதிகளும் கிடைக்கும் போது இன்று தெரியும் குறைபாடுகள் தெரியாமலே போய்விடும். நிவர்த்தி செய்யப்பட்டுவிடும்.

□□□□□□

முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தினரும் படத்தில் பங்கு கொண்ட சகல கலைஞர்களும், இயக்குனர் பொ. தாசன் உட்பட சகலருமே பாராட்டுக்கு உரியவர்கள். □□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அபத்தமும் அர்த்தமும்

பிரம்மஞானி

மனிதனிலிருந்து தொடங்குகிறது இந்தத் தத்துவம். எல்லாவற்றிற்கும் மேலாக, மனித இருப்பிற்கு அது முதன்மை கொடுக்கிறது.

இது மனித உலகம். மனிதன் வாழும் உலகம். மனிதனால் படைக்கப்பட்ட உலகம். மனித உறவுகளால் பின்னப்பட்ட உலகம். இந்த உலகில் சகலதற்கும் மையமாக இருப்பவன் மனிதன். மனிதனே இவ்வுலகின் மெய்ப்பொருள். சகலதற்கும் அவனே அடிப்படை. சகலதற்கும் அவனே அளவுகோல். அவனிலிருந்தே சகலதும் அர்த்தம் பெறுகிறது.

எனது இருப்பே எனக்கு முதன்மையான உண்மை. எனது இருப்புநிலையிலிருந்தே நான் என்னையும் இந்த உலகத்தையும் இனம்கண்டுகொள்கிறேன். நானே எனக்கு வெளிச்சம் நானே எனது வழிகாட்டி. நானே எனது இருப்பிற்கு ஆதாரம். என்னிலிருந்தே எல்லாம் எனக்கு தோற்றப்பாடு கொள்கிறது. நான் வாழும் இந்த உலகமும், நான் உறவுகொள்ளும் மற்றவனும், என்னைச் சூழ இருப்புக்கொள்ளும் எல்லாமே எனது அனுபவத் தரிசனத்தால் அர்த்தம்பெறுகிறது.

மனித வாழ்வுபற்றிய விசாரணைகள் அனைத்தும் மனிதனிலிருந்தே தொடங்க வேண்டும் என்கிறது இந்தத் தத்துவம். மனித அனுபவத்திற்கு அது முக்கியத்துவம் கொடுக்கிறது.

மனிதனுக்கு புறம்பாக நின்று, மனித உலகத்திற்கு அப்பால் நின்று, மனிதனைக் கண்டுகொள்ள முடியாது. மனித மெய்யுண்மையை மனிதனிடமிருந்து, மனித அனுபவத்திலிருந்து, மனித வாழ்நிலையிலிருந்தே கண்டுகொள்ளமுடியும்.

மனிதன் என்பவன் வானத்திலிருந்துபூமியில் விழுந்த அற்புதம் அல்ல. அன்றி இயற்கையால் வனையப்பெற்ற பொம்மையும் அல்ல. மனித இயல்பு என்பது இயற்கையின் பரிணாம விதியால் மனிதனிடம் திணிக்கப்பட்ட பண்பு அல்ல. மனித இருப்பிலிருந்தே மனிதனின் இயல்பு தோன்றுகிறது. மனிதனே தன்னைப் படைக்கிறான். தன்னை உருவாக்கம் செய்கிறான். மனிதனே மனிதனின் சிருஷ்டி கர்த்தா.

மனித இயல்பிற்கு முன்னோடியானது மனித இருப்பு (*Human existence proceeds Human essence*) என்கிறது இந்தத் தத்துவம்.

பிறப்புடன் இந்த உலகத்தில் பிரவேசம்செய்யும் மனிதன், தான் பிறந்த கணத்திலிருந்து தனது இருப்பையே முதலில் உணர்ந்துகொள்கிறான். ஜீவானுபவமே எல்லாவற்றிற்கும் முதன்மையானது. தனது இருத்தலை உணர்ந்துகொண்ட பிரக்ஞையுடன், மனிதன் முதலில் தன்னை எதிர்கொள்கிறான், தன்னைச் சூழவுள்ள மனித உலகத்தை எதிர்கொள்கிறான். தொடக்கத்தில், மனித இயல்பு என்று எதுவும் இருப்பதில்லை. ஆரம்பத்தில், மனிதன் ஒரு வெறுமையாகப் பிறப்பு எடுக்கிறான். காலப்போக்கிலேயே தனது வெறுமையை நிறைவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்து கொள்கிறான். மனித இயல்பு என்பது இருப்பின் வாயிலாக, வாழ்வனுபவத்தினால் மனிதன் தானாக சிருஷ்டித்துக் கொள்ளும் மாண்பு.

மனிதனின் இருப்புநிலையை ஆழமாகத் தரிசிக்க விழையும் இந்தத் தத்துவம் தனி மனிதனுக்கும் தனிமனிதனின் வாழ்வனுபவத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது.

வாழ்வனுபவ நிலையில், எல்லா மனிதர்களும் தனிமனிதர்கள். அனுபவம் அகவயமானது; அகநிலை தனித்துவமானது; தனிமனிதம் சார்ந்தது. எனவே, மனிதானுபவம் என்பது தனிமனிதனிடமிருந்து, தனிமனிதக்கூறுகளாக பிரவாகம் எடுக்கிறது.

இந்த உலகத்தில் நான் ஒரு தனிமனிதப் பிறவி. இனம், மதம், தேசம், சமூகம் என்ற முழுமையில், மொத்தத்தில், கூட்டுறவில் நான் கட்டுண்டு கிடந்தபோதும், நிதர்சன வாழ்வில் நான் தனித்துவமானவன். முழுமை என்ற பெருவெள்ளம் என்னை அடித்துச்சென்றபோதும் நான் என்னை நானாக, ஒரு தனித்துவ ஜீவனாக, ஒரு சுதந்திரப் பிறவியாக, நானே எனக்குப் பொறுப்பானவனாக. நானே எல்லாவற்றையும் தெரிவுசெய்பவனாக, தீர்மானிப்பவனாக, எனது வாழ்வனுபவத்திற்கு நானே உரித்தானவனாக, நான் என்னை, எனது தனித்துவத்தை உணர்கிறேன். மீளமுடியாதவாறு, தனிமனிதம் என்ற சிலுவையில் நான் அறைபட்டுக்கிடக்கிறேன்.

தனிமனிதத்துவத்தை இந்தத் தத்துவம் வலியுறுத்துகிறது. ஆயினும், அதே வேளை கூட்டுவாழ்வின் நிதர்சனத்தை அது மறுதலிக்கவில்லை.

மனிதன் தனிமனிதப்பிறவியாகவாழ்ந்த போதும் மனித உறவுகள் என்ற சங்கிலித் தொடர்பில் பிணைக்கப்பட்டிருக்கிறான். தனிமனித இருப்பு சமூக இருப்பு என்ற சமுத்திரத்துடன் சதா சங்கமிக்கிறது.

இந்த உலகம் என்பதே, மானிடத்தைக் குறிக்கிறது; மற்றவர்களைக் குறிக்கிறது. இந்த மனித உலகத்தில் நான் தனித்து நின்றபோதும் மற்றவர்களுடன் இணைந்து வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறேன். எனது இருப்பின் எண்ணற்ற தேவைகளை நிறைவு செய்ய மற்றவர்களின் உறவு எனக்குத் தேவை. நான் தனித்தவனாக, தனிமனிதனாக, சமூக உறவுகளை அறுத்துக்கொண்டு தனிச் சீவியம் நடத்த முடியாது. நான் வாழ, மற்றவர்களுடனான கூட்டுவாழ்வு எனக்கு அவசியம்.

நான் எனக்கு மட்டும் பொறுப்பாளி அல்ல. நான் மற்றவர்களுக்கும் பொறுப்பாளியாக இருக்கிறேன். சமூகத்தின் சட்டம், சமூகத்தின் கடப்பாடுகளிலிருந்து நான் தப்பிவிட முடியாது. எனதுசெயற்பாடுகளும் நான் எடுக்கும் முடிவுகளும், மற்றவர்கள் சம்பந்தப்பட்டதால் நான் எனக்கு மட்டுமல்ல, உலகத்தாருக்கும் பொறுப்புள்ளவனாக இருக்கிறேன். அன்பையும், ஆதரவையும், அரவணைப்பையும் நான் மற்றவர்களிடம் வேண்டிநிற்கிறேன். எனது உடற்பசிக்கும், உளப் பசிக்கும், எனது ஆசைக்கும் அவாவிற்கும் மற்றவர்களின் உறவு அத்தியாவசியமாகிறது. நான் எனக்காக, என் குறிக்கோளுக்காக, என் திருப்திக்காக, என் நிறைவுக்காக, என் வாழ்விற்காக, என் இருப்பிற்காக, மற்றவர்களை நாடி நிற்கிறேன். நானும் மற்றவர்களும் என்ற உறவு, என் இருப்பின் தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தமாக என்னையும் மற்றவர்களையும் பிணைத்து வைத்திருக்கிறது. என்னைப் புரிந்துகொண்டவர்களுடன், எனதுபோக்கிற்கும் பார்வைக்கும் ஒத்திசைவான மற்றவர்களுடன் நான் உறவுகொள்ளும்பொழுது, அந்தக் கூட்டுறவு எனது தனித்துவத்தைப் பேண ஏதுவாக அமைகிறது. இந்த உறவில் நானும் மற்றவனும் அவரவர் தனித்துவ அடையாளங்களை இனம்கண்டு, அதைப் புரிந்துகொண்டு, அந்தப் புரிந்துணர்வால் எழும் பற்றுறவால் பிணைந்துகொள்ளும் பொழுது எனது தனித்துவத்தின் சுதந்திரம் மேம்பாடு கொள்கிறது.

www.tamilarangam.net



மற்றவர்களுடனான உறவு ஒத்திசைவாக அமையும்போது தனிமனித வாழ்வு நிறைவுடையதாக அமைகிறது. கூட்டு வாழ்வு இசைவாக அமைந்து, எனது மனிதத்துவத்தையும் சுதந்திரத்தையும் மேம்பாடு செய்யுமானால் எனது இருப்பு ஆக்கபூர்வமானதாக, அர்த்தபூர்வமானதாக (*Authentic existence*) அமைகிறது. ஆனால், அதேவேளை சமூகக் கூட்டுவாழ்வு எனது தனித்துவத்தை நசுக்கிவிடும் எதிர்மறைத் தன்மைகளையும் கொண்டது. தனிமனிதனுக்கு விரோதமானதாக, தனிமனித சுதந்திரங்களை ஏப்பம்விடும் அதிகார பூதமாக சமூகக் கட்டமைப்பு உருவாக்கம் பெறும்பொழுது எனது இருப்பு அர்த்தவீனமானதாக மாறிவிடுகிறது. இந்த சூழ்நிலையில், அருபமான, அனாமதேயமான, ஒரு முகமற்ற சக்தியாக சமூகத்தை நான் எதிர்கொள்கிறேன். எனக்குப் புறம்பாக, எனக்கு முரணாக, எனக்கு விரோதமாக சமூகம் இருப்புக்கொள்கிறது. ஆன்மாவை இழந்தவர்களாக, அடையாளமற்றவர்களாக, வெற்று மனிதர்களாக நான் மற்றவர்களை எதிர்கொள்கிறேன். இப்படியான சமூக சூழலில், எனக்கும் மற்றவர்களுக்குமான உறவு அர்த்தமற்றதாகிறது. அபத்தமாகிறது.

அபத்தமான வாழ்நிலைபற்றியும், அபத்தத்திலிருந்து அர்த்தத்தைத் தேடும் மனிதனின் முனைப்புகள்பற்றியும் இந்தத் தத்துவம் ஆழமாக விசாரணைகளைச் செய்கிறது.

இந்தத் தத்துவம் இருப்பியம் (*Existentialism*) எனப்படும்.

இந்தத் தத்துவார்த்த சிந்தனை 19ம் 20ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் தோற்றம்கொண்டது. இந்தக் கருத்துலகை சிருஷ்டித்த தத்துவாசிரியர்கள் பலர். ஒவ்வொருவரும் வித்தியாசமாக எழுதினார்கள். ஒவ்வொருவரது வாழ்க்கைப் பின்னணியும், வரலாற்றுச் சூழ்நிலையும் வேறுபட்டிருப்பினும் தாம் வாழ்ந்த காலத்தை உருவகப்படுத்தி, அக்காலத்தில் வாழ்ந்த மனிதனின் வாழ்நிலை அனுபவத்தை முதன்மைப்படுத்தி எழுதினார்கள்.

ஐரோப்பிய முதலாளியத்தின் வளர்ச்சி, ஏகாதிபத்தியத்தால் எழுந்த உலக ஆதிக்கப் போட்டி, ரஷ்ய கம்யூனிஸ்ட் புரட்சி, நாசிஸத்தின் எழுச்சி உலக மகா யுத்தங்கள் - இப்படியான வரலாற்று நிகழ்வுகளால் ஐரோப்பிய மனிதனின் வாழ்விலும் பார்வையிலும் பாரதூரமான பாதிப்புகள் விழுந்தன. மனித நாகரீகத்தின் சிகரத்தில் நின்று கொண்டு உலகத்திற்கு ஒளி விளக்காக இருப்பதாக ஐரோப்பிய மனிதன் கண்டுவந்த கனவு, இந்த நிகழ்வுகளால் தகர்ந்து போனது. கிறிஸ்தவ அறத்தில் கேள்விக்குறி எழுந்தது. கடவுட் கோட்பாட்டில் நம்பிக்கை தளர்ந்தது. சர்வாதிகார சமூகக் கட்டமைப்பில் வெறுப்புத் தட்டியது. விஞ்ஞானத்தின் அழிவுநோக்கிய அசுர வளர்ச்சியில் பயம் எழுந்தது. இந்தப் புறநிலைப் பாதிப்புகளால் ஐரோப்பிய சிந்தனையாளர் சிலர் ஐரோப்பிய சிந்தனைப் பாரம்பரியத்தை உடைத்துக்கொண்டு வித்தியாசமாகச் சிந்தித்தனர். மனிதத்துவத்தின் இயல்பையும், வாழ்க்கையின் அர்த்தத்தையும் கண்டு கொள்ள விழைந்த இந்தச் சிந்தனையாளரின் தேடுதலாக இருப்பியக் கருத்துலகம் தோற்றம் எடுத்தது.

இருப்பியல் கருத்துலகைப் படைத்த தத்துவாசிரியர்கள் வரிசையில் சோரன் கைகேகார்ட் (*Soren Kierkegaard*) நீட்சே (*Nietzsche*) மார்டின் கைடேகர் (*Martin Heidegger*) கார்ள் ஜாஸ்பர்ஸ் (*Karl Jaspers*) ஹுசேள் (*Husserl*) ஜோன் போல் சாத்தர் (*Jean Paul sartre*) ஆகியோரை முக்கியமாகக் குறிப்பிடலாம். டொஸ்தோவஸ்கி (*Dostoyevsky*) காவ்கா (*Kafka*) போன்ற எழுத்தாளர்களின் படைப்பிலக்கியங்களும் இருப்பியத் தரிசனங்களாகக் கொள்ளப்படுவதுண்டு.

வித்தியாசமான காலத்தில், வித்தியாசமான சூழலில், வித்தியாசமான வடிவத்தில்,

www.tamilarangam.net



வித்தியாசமான நடையில், வித்தியாசமான பார்வையில், இவர்களது எழுத்துக்கள் அமைந்தபோதும், பொதுப்படைக் கருப் பொருளாக மனித நிதர்சனம் பற்றியும், மனித இருப்புநிலைபற்றியும், மனித வாழ் வனுபவம்பற்றியும் மிகவும் தீட்சண்யமான கூர்நோக்குடன் இவர்கள் எழுதினார்கள்.

சோரன் கைகேகார்ட் (1815 —55) இருப்பிய தத்துவத்தின் தந்தையாக கருதப் படுபவர். இவர் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த சிந்தனையாளர்.

ஐரோப்பிய சிந்தனைப் பாரம்பரியம் தனிமனிதனின் ஆழமான உணர்வுகளை தொட்டு நிற்கவில்லை. மாறாக, மனித வாழ்வனுபவத்திற்குப் புறம்பாக நின்று, புரியாத மொழியில், பூடகமான தத்துவக் கோட்டைகளை கட்டியெழுப்பியது என விமர்சித்தார் கைகேகார்ட். இந்தத் தத்துவ தரிசனங்களின் சிறப்புப் பிரதிநிதியாக விளங் கிய ஹேகலை அவர் கண்டித்தார். மனித இருப்புநிலைக்கு அப்பால், புலனாகாத பிர பஞ்ச விசாலத்தில் மனித வாழ்விற்கு அர்த் தம் தேடும் ஹேகலின் தத்துவத்தில் எவ் வித அர்த்தமும் இல்லை என்றார். சிந் தனை உலகத்தில் உண்மையைக் கண்டு கொள்ள முடியாது. உண்மை என்பது அக வயமானது; அது மனிதனின் உள்ளார்த்த இரகசியமாக, மனிதனின் உள்ளுணர்வில் மறைந்து கிடக்கிறது, என்றார். வாழ்நிலை யில் மனிதன் எதிர்கொள்ளும் மன அவலங் களை, அங்கலாய்ப்புகளை அவரது எழுத் துக்கள் மிகவும் துல்லியமாக விபரிக்கிறது. நிலையாமையை, நித்தியமின்மையை சந் தித்து நிற்கும் தனிமனிதன் இருப்பின் அர்த் தத்தைப் புரியாது தடுமாறும் தவிப்பையும் துயரத்தையும் மிகவும் ஆழமான ஆன்ம சோதனையாக அவர் சித்தரிக்கிறார். அவ ரது எழுத்துக்கள் மனித இருத்தலையும், மனிதஉணர்வுகளையும் முதன்மைப்படுத்தி நிற்பதால் இருப்பிய தத்துவத்தின் முன் னோடியாக அவர் கருதப்படுகிறார்.

நாஸ்திக இருப்பிய வாதிகளின் குரு நாதராகக் கருதப்படுவர் நீச்சே. (இவரது தத்துவப் பார்வைபற்றி பிறிதொரு கட்டு ரையில் குறிப்பிட்டிருந்தோம்.)

கடவுள் மரணித்துவிட்டார் என்ற செய்தியை இவர் மானிடத்திற்கு எடுத்துச் சொல்கிறார்.

கடவுளின் மரணத்துடன் ஆன்மீக உல கமும் அஸ்தமித்துவிடுகிறது. நரகம் என் றும், சுவர்க்கம் என்றும், பாவம் என்றும், புண்ணியம் என்றும், கர்மம் என்றும், தர் மம் என்றும், கடவுட் கோட்பாட்டின்கீழ் கட்டியெழுப்பப்பட்ட அறநெறிகள் அனைத் தும் அர்த்தமிழந்து போகிறது. நிரந்தரமான ஆன்மாவைக் கற்பித்து, நித்திய சீவியத் திற்கு ஆசைகொண்ட மானிடத்தின் கன வும் கடவுளின் மரணத்துடன் செத்துப் போய்விடுகிறது. மனித வாழ்வும் அர்த்த மிழந்துபோகிறது. அபத்தமாக மாறுகிறது. நித்தியமானது செத்துப்போனதால் நிலை யாமையானது இருப்பின் பேருண்மையாகி றது. சாவின் இருள் பூமிமீது நிரந்தரமா கக் கவிந்துகொள்கிறது. மரணத்தின் குகைக்குள் வாழ மானிடம் நிர்ப்பந்திக்கப் படுகிறது.

நீச்சே, மனிதனின் கனவுகளை கலைத்து விட முனைந்தார்; மனித இருப்பின் மிக வும் கசப்பான உண்மைகளை எடுத்துரைத் தார்; பூமியில் கடவுளின் ஆட்சியைக் கவிழ்த்து, அந்தச் சிம்மாசனத்தில் மனி தனை இருத்திவிட முனைந்தார் என்பது அவரைக் குருவாக வரித்துக்கொண்டவர்க ளின் கூற்று.

கடவுள் இல்லாத உலகமும், அறமில் லாத வாழ்வும், நிலையில்லாத சீவியமுமே, மனித இருப்பின் துயரமான, அவலமான, நிதர்சனமான நிலை என்பதை அவரது எழுத்துக்கள் அழுத்தமாகச் சொல்கிறது.

காலத்தில் முகிழ்கிறது வாழ்வு. பிறப் பிற்கும் இறப்பிற்குமிடையே விரியும் காலத்

www.tamilarangam.net



தில் நிலைக்கிறது வாழ்வு. இந்தக் காலம் தான் மனித இருப்பின் எல்லைக்கோட்டை இடுகிறது. இருத்தலின் எல்லைக்கு அப்பால் இல்லாமை இருக்கிறது. இல்லாமையை, அதாவது இருத்தலிலிருந்து இல்லாமல்போவதை, சாவு என்று சொல்கிறான் மனிதன்.

காலமும், நிலையாமையும், சாவும் மனித இருத்தலின் மெய்யுண்மைகள். இவை பற்றிய ஆழமான தரிசனத்தைத் தருகிறார் கைடேகர். இருப்பிய தத்துவாசிரியர்களில் இவர் மிகவும் முக்கியமானவர்.

இருப்பு என்பது காலத்தின் பாதையால் நடைபெறும் பயணம். இந்தப்பயணத்தில் நான் ஒரு கணமும் தரித்துநிற்க முடியாதவாறு காலம் என்னை நகர்த்திச் செல்கிறது. இழுத்துச் செல்கிறது. நான் காலத்தில் மிதந்துகொண்டுபயணிக்கிறேன். நான் நடந்து முடிந்தது, இறந்த காலமாகவும் நடக்கப் போவது எதிர்காலமாகவும், நடந்துகொண்டிருப்பது நிகழ்காலமாகவும் எனக்குத் தென்படுகிறது. இறந்தகாலம் செத்துப்போனாலும் எனது அனுபவத்தின் நிழலாக அது என்னை சதா பின்தொடர்கிறது.

எனது வாழ்வனுபவம் எப்பொழுதுமே நிகழ்காலமாகவே கட்டவிழ்கிறது. எதிர்காலமானது, இறந்தகாலமாக மாறும் நொடிப் பொழுதுகளாக நான் நிகழ் காலத்தை அனுபவிக்கிறேன்.

நிகழ்கால அனுபவமே நிதர்சனமானது, மெய்மையானது என்கிறார் கைடேகர். ஆனால் மனிதன் நிகழ்காலத்தில் வாழாமல், எதிர்காலம் பற்றியே சிந்திக்கிறான். மனித ஆசைகளும், எதிர்பார்ப்புகளும், திட்டங்களும், எதிர்காலத்தில் நிறுத்தப்பட்டிருப்பதால், மனிதமனமானது எதிர்காலத்தை நோக்கியதாக, எதிர்காலத்தில் நிலைத்துப் போகிறது. செத்துப்போன காலத்தில் புதையுண்டு போகாமலும், எதிர்காலத்தையே சதா எண்ணிக்கிடக்காமலும், நிகழ்காலத்தில் வாழ்வதுதான் அர்த்தபூர்வமானது என்கிறார் அவர்.

காலத்தில் நிகழும் எனது பயணம் சாவுடன் முடிவடைகிறது.

நிலையற்ற இந்த உலகில் நிலையானதாக ஒன்று உண்டு என்றால் அதுதான் சாவு. எனது உயிர்ப்பின் கணத்திலிருந்து சாவும் என்னோடு உடன்பிறப்பு எடுத்திருக்கிறது. எனது இருத்தலின் ஒவ்வொரு கணத்திலும் இல்லாமை என்ற சூன்யத்தை நான் எதிர்கொண்டு வாழ்கிறேன். எனது சாவை நான் பட்டறிந்துகொள்ள முடியாது. இந்த உலகில் அதுமட்டும் எனது அனுபவத்திற்கு அப்பாலானது. எனது அனுபவத்தின் முடிவாக, எனது இருத்தலின் முடிவாக, நான் இல்லாமல்போகும் இறுதிக் கணமாக சாவு என்னை எதிர்கொண்டு நிற்கிறது.

என்னைச் சூழ எங்கும் சாவு நிகழ்கிறது. மற்றவர்களது சாவை நான் நித்தமும் சந்திக்கிறேன். எனக்கு வேண்டியவர்கள் நான் பற்றுக்கொண்டவர்கள் மடியும்போது துயரத்தின் சுமை என் ஆன்மாவை அழுத்துகிறது. மனித இருப்பின் மிகவும் சோகமான, துன்பமான நிகழ்வாக சாவு சம்பவிக்கிறது.

எந்த நேரத்திலும், எந்த சூழ்நிலையிலும், நான் சற்றும் எதிர்பாராத சந்தர்ப்பத்தில், சாவு எனது கதவைத் தட்டலாம் திடீரென, இருப்பிலிருந்து இல்லாமை என்ற சூன்யத்திற்குள் நான் தூக்கி வீசப்படலாம். எனது இருப்பின் நிலையாமை எனக்குத் தெரிந்தும், சாவின் நிச்சயத்துவத்தை நான் உணர்ந்தும், நான் அதுபற்றி சிந்திக்கத் துணிவதில்லை. மனித பயங்கள் எல்லாவற்றிற்கும் மூலபயமாக, தலையான பயமாக, மரண பயம் எனது ஆழ்மனக் குகைக்குள் ஒளிந்து கிடக்கிறது. நான் அதை அடக்கி, ஒடுக்கி, என் நனவு மனதிலிருந்து ஒதுக்கி வைத்திருக்கிறேன்.

சாவு என்பது மனித இருப்புநிலையின் தவிர்க்க முடியாத உண்மை என்கிறார் கைடேகர். அதை மறுப்பதும், அதற்கு அஞ்ச

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வதும், அதிலிருந்து ஓடி ஒளிந்துகொள்ள முயல்வதும் அபத்தமானது. சாவின் பிடியிலிருந்து எவருமே தப்பிவிட முடியாது. அது வாழ்வின் ஒரு நிகழ்வாக என்றோ ஒரு நாள் எதிர்கொள்ளவேண்டியது. சாவைச் சந்திப்பதற்கு மனிதன் துணியவேண்டும். அந்தத் துணிவிலும், தெளிவிலும், விழிப்பிலுமே மனித வாழ்வு அர்த்தமுள்ளதாக, நிறைவானதாக அமையும் என்கிறார் கைடேகர்.

(தொடரும்)

# பிஞ்சுமனம்

வேலணையூர் சுரேஸ்



எமது தாய்நாடு
''தமிழீழம்''
எமது தேசியக் கொடி
''புலிக்கொடி''
எமது தேசியத் தலைவன்
''பிரபாகரன்''!
என்றெல்லாம்.........
நன்கறிந்த பிள்ளையிடம்
இந்தா படியென்று
அந்தப் பாடப் புத்தகத்தை
எப்படிக் கொடுப்பது?
''வாளேந்திய சிங்கம்'' நிற்கும்
சின்னம் பொறித்த
தாளுடன் தொடங்கும் அந்நூலை
விரித்து.........
விளங்கிப் படியென்று அவனிடம்
என்னென்று சொல்வது?
சிறிலங்கா நாட்டின் ''தேசியகீதம்''
அலங்கரிக்கும் முன்பக்கத்துடன்
அணிவகுக்கும் பாடங்களை
விளங்கிப் படியென்று .......
அவனிடம் எப்படிச் சொல்வது?
'சிங்கத்தின் சின்னம் இந்நூலில்
அங்கம் வகிப்பதெனில்.........
தமிழரின் ''வேங்கைச் சின்னம்''
எங்கே போனது?' என்பானாயின்
எந்தன் நிலை என்னாகும்?
இலங்கை நாட்டிலிருந்து
இந்நூல் வருவதெனில்
ஈழநாட்டிற்கு.........
விலங்கையிட்டது யாரென்று
வினாவெடுப்பானாயில்
நான் ஏது செய்வேன்?
இப்படி இருக்கையிலே
தாய்நாடு இலங்கை யென்று
வாயெடுத்து நான்கூற.........
பேய் வீடு இலங்கையென்று
பதிலுரைத்தால்.........
எந்த முகத்துடன் அவன்முன் நிற்பது?

www.tamilarangam.net



# அர்த்தநாரீஸ்வரர்கள்

கி. சிவஞானம்

கனவு காண்பதும் காதல் செய்வதும்
கட்டித்தழுவியே நேசம் கொள்வதும்
கபடமின்றியே பாடிமகிழ்வதும்
காடு மேடெலாம் கூடியாடியே மதுக்குடித்துக் கிடப்பதும்
அவனுயிர்ப் பாங்குகள்.
காடும் மலையும் மரமும் மயிலும் குயிலும்
ஆடும் பாம்பும் ஓடும் நதியும் அவனுயிர்த் தோழர்கள்.
கட்டுக்கள் எதுவுமற்றவன்
வீசும் காற்றைப் போன்றவன்
கறுப்பன் — ஆபிரிக்கன்.
அதோ, அவனருகே
ஒரு வெள்ளைப் பிசாசு,
அதன் இடக்கரத்தில் துப்பாக்கி;
வலக்கரத்தில் சவுக்கொன்று.
சவுக்கின் சொடுக்கலில்
பட்டை பட்டையாய் உரிந்து போயின பண்பாடுகள்
அவன் முதுகுத் தோலாய்!

அன்பினை வென்றே பாடிக் களித்தாடி நின்றதும்
வேட்டையாடியே முயலைப் பிடித்ததும் .........
எல்லாம் எல்லாமே தொலைந்து போயின.
சவுக்கின் வீச்சில்
அவனின் தன்மானமும் ஆடைகளும் களையப்பட்டன.
ஒரு விலங்கைப் போல் விலங்கிடப்பட்டவன்
கப்பலில் ஏற்றப்பட்டான்.
அமெரிக்காவில்,
கறுப்பன், கனவு காண்பதும் காதல் செய்வதும்
தாயின் மொழியிலே கதைத்துத் திரிவதும்
தண்டனைக்குரியதாயிற்று.
மூலை பெருத்த இளம் கறுப்பியோ
தினவெடுத்த வெள்ளை நாயின்
தலையணை யென்றனர், அவள் முலை சொரியும் பாலெல்லாம்
வெள்ளைக் குழந்தைக்கு
உணவாய்த் தந்திடு என்றே கட்டளையிட்டனர்.
கும்பிட்டுக் கும்பிட்டு இழகிக் கண்ணீர் விட்டே
கால் பற்றிக் கதறி அழவும்
கட்டிய கணவனைக் கொஞ்சும் குழந்தையை
கெஞ்சும் அண்ணனைத் தம்பியை அன்பின் பிணைப்பானை
அறுத்தே அடிமைச் சந்தையில் விற்றனர்.
நெஞ்சு வெடித்திடும் எத்தனை சோகம்?

www.tamilarangam.net



அடிமையாய் இருப்பது எத்தனை வெட்கம் ; துக்கம்?
ஆண்டு நூறுகள் அடங்கிக் கிடந்தவர்
வெஞ்சினம் கொண்டே எழுந்தனர்.

□

தாயகம் பறிக்கப்பட்ட அவன்
உலகின் திசையெலாம் பரவிக் கிடந்தனன்
'இஸ்ரவேல் எனது தாயகம், இதுவே அவனது 'சிவாயநம'
அறிவைத் தேடுவது அவன் மூச்சு
விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் அவனிரு நுரையீரல்கள்
அவன் ஒரு யூதன்.
அதோ அவனைச் சூழ
நறுக்கு மீசையுடன் நாஜி ஜேர்மனியன்.
வெறி கொண்ட அவன் குரல் திக்கெலாம் ஓங்கி ஒலிக்கிறது.
'ஜேர்மனியனே மேலவன்'
'யூதனைக் கொல்வோம்'
கடவுளின் குழந்தைகளால் கடவுளிற்கு
யூதனின்
உச்சிமுடியும் உள்ளாடைகளும் படைக்கப்பட்டன.
ஜேர்மனியனின் மேன்மைக்காய்
ஐம்பது லட்சம் யூதர்கள் பலியிடப்பட்டனர்.
தப்பிநின்றவர் கண்விழித்தனர்;
தாயகமொன்றே வாழ்வென்றுணர்ந்தனர்
குமுறி நின்றவர் கொதித் தெழுந்தனர்.
காடு மேடு கடலெல்லாம் தாண்டியே
தாயகம் நோக்கிய பயணம் தொடங்கினர்.
வாழ்வை வென்றனர், 'இஸ்ரவேலெ'னும் தாயகம் கண்டனர்.

சிங்கத்தினாட்சியில் சிறுவிலங்குக் கூட்டங்களாய்
அஞ்சிக் கிடந்திட்ட பெருங்கறுப்பர்,
அடிமையாய்க் கிடப்பதன் அரியண்டம் புரிந்தனர்.
நிறவெறியின் நேர்மையைத் தெளிந்தவர்
நெஞ்சிலே குண்டேந்திச் செத்துச் செத்தே எழுந்தனர்,
நேற்றுப் புது தென்னாபிரிக்கா படைத்தனர்.

□

கல்லடர்ந்த கட்டாந்தரையும் இவன்
கைக் கடங்கிக் காட்சிதர
ஆழ நீர் கோலியிறைத்துப் பயிர் வளர்த்தபின்
தேட்ட மெலாம் சேர்த்தவன்
பிள்ளைக்காய் வீடொன்று கட்டி........
உழைப்பதே இவனுயிர்.
திருநீறும் திருவடியும்
காவடியும் கூத்தும் விரதமும் இவன் அருமருந்துகள்
கல்வியும் கடவுளும் இவனிரு கண்கள்
இவன் சுதந்திர இலங்கையன்? தமிழன்?
இதோ இதோ இவனிற்கருகே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மழித்த தலையும் தரித்த காவியும்
தீயுமிழும் கண்களும்.........
கையில் கோடரியும் கொடுவாளும்.........
பிட்சா பாத்திரம் துறந்த துறவி ........
அவரின் உதடுகள் புலம்பின—
'கொத்துவேன்; வெட்டுவேன்; நன்றாய்க் கொழுத்துவேன்
கண்ணைப் பிடுங்கியே தரையில் வீசுவேன் — என்
வாழேந்திய சிங்கத்தின் பசியாறும் வரை
"நீ வீடு கட்டலாம்
வேட்டி உடுக்கலாம்
சாமி காவலாம்
சந்தணம் வைக்கலாம்; எல்லாம் செய்யலாம்.
..............
என் சிங்கம் மீண்டும் சந்நதம் கொள்ளும்வரை".

"நான் சுதந்திரமானவன்; இலங்கைத், தமிழன்"
— ஓர் கீச்சுக்குரல்.
துறவியின் தீயமிழும் கண்கள் துடிக்க
பேயுமிழும் வார்த்தைகள் குதித்தன —
"முடியாது!
பௌத்தன் மட்டுமே சுதந்திரன்; பூரணன்
நீ வளர்ப்பு நாய்.
கூடுண்டு உனக்கு; குளிக்க வார்க்க ஆட்களும் உண்டு;
மணியடிக்கச் சோறுண்டு.
எல்லா முண்டேயாயினும்,
உனதெண்ணப்படி ஓடவும்; ஓடியோர் துணை தேடவும்
தேடிக் கூடவும் முடியாது.
உன்னைக் கூண்டோடு கொழுத்தவும்
கொழுத்திய சாம்பல் மேட்டிலோர்
வீடெனக்குக் கட்டவும் என்னால் முடியும்.
நானோ உன் எஜமான்"

□

ஆபிரிக்கக் கறுப்பனாய்
யூதனாய்
எல்லாத் தமிழரும் ஏன் இல்லாது போனோம்?
எங்களிற் பலரோ
அர்த்தநாரீஸ்வரர்களாய்.........
சுகமும் போகமும்; படுத்துறங்கச் சிறுதுண்டு சாக்கும்
போதுமெனும் பேதமை.........
அடிமையின் சோகம்
சுதந்திரமாய் இருக்க விடப்படுபவர்களாய்.........
பதியை மறைத்திடும்
பாசத்தைப் பற்றிய பசுக்களாய் இன்னும்.........
"என்று மடியுமிந்த அடிமையின் மோகம்?"

□□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சாந்தனின்
## சிறுகதைத்தொகுதி
# காலங்கள்




### இயல்வாணன்

மட்டரக வாசகர்களால் நிராகரிக்கப்படும் தரமான படைப்பாளி சாந்தன். இந்த நிராகரிப்புக்குக் காரணம் அவர், தான் சொல்ல வந்ததைச் சுருக்கமாகவும் குறியீட்டுத்தன்மையுடனும் சொல்வதே. நவீன ஓவியங்களின் புரிதலும், சாந்தன் கதைகளின் புரிதலும் ஏறக்குறைய ஒரே மாதிரியானவை என்பேன்.

காலங்கள் கதைத் தொகுதியில் 1974ல் இருந்து 1991ம் ஆண்டு வரையான பதினைந்து கதைகள் உள்ளன.

சமூக அரசியல் களங்கள் அவர் கதைகளில் தென்படும் என்பதைப் பல கதைகள் நிரூபிக்கின்றன. 'இரு கோடுகள்' கதையில் 'மூர்த்தி' என்ற பஸ் பயணி, பஸ்ஸால் விழுந்த கொண்டக்டரை எண்ணி வருந்தாது, தமிழாராட்சி மாநாட்டுச் சம்பவம் அவனது மனதை ஆக்கிரமிப்பது காட்டப்படுகிறது. அதே போன்று சிங்கள மயமாகும் திருகோணமலையைக் காண நேரும் தமிழ் இளைஞனான சிவத்தின் உணர்வு நிலை ''அந்நியமான உண்மைகள்'' கதையில் காட்டப்படுகிறது. நல்ல கதைகள். எனினும் சிலபாத்திரங்களின் உணர்வுகள் சரியாக வெளிப்படவில்லை.

'அஸ்பெஸ்ரஸ்' 'தலைமுறைகள்' 'வீடு' 'உறுத்தல்' என்பன அண்மைய போர்க்கால வாழ் நிலை அம்சங்களைச் சுருக்கமாக, ஆழமாகச் சொல்கின்றன. 'வீடு' கதை மனதை நெருடச் செய்கிறது. அதே போன்று இந்திய இராணுவ வருகையைத் தெரிவித்த பெண் நாயை இந்திய இராணுவம் சென்ற பின்னர் கொல்ல எண்ணும் மணியத்தாரின் கதை -'நன்றி'- மனதைத் துடிக்க வைப்பது. 'அதே விதியெனில்' கதையில் ஒரு அரசியல் நியாயத்தை எளிமையாகச் சொல்லியிருக்கிறார்.

பொதுவில் சாந்தனின் கதைகள் புறவரைவுகளாகவே காட்சியளிக்கும். அவற்றைத்தகுந்த உருவமாக்கி உய்த்துணர வேண்டியது தரமான வாசகர்களின் கடமை.

சாந்தனின் கதைகள் அழகும் கலை நேர்த்தியும் மிக்கவை. வெளிப்படையாகவே அவரை நல்ல படைப்பாளியாக இனங்காட்டக் கூடியன.

ஆயினும் இந்நூலில், சாந்தனது பாத்திரங்கள் தமக்குள்ளே குமைந்து விட்டு அடங்கிப் போகின்றன. வெறும் நடைப்பிணமாக நிற்கின்றன. அவர்களது உணர்வுகளில் தீப்பொறி எழவேண்டாமா?

அது மட்டுமன்றி 1974ல் சாந்தனிடம் இருந்த உணர்வு நிலை 1991லும் ஒரே மாதிரியாகவே உள்ளது. இது முனைப்பும் முன்னேற்றமும் காணவேண்டாமா?

'காலங்கள்' கதை விதந்து கூறத்தக்கது. கால மாற்றம் உண்மையானது. அது கதையில் நடைமுறையாகக் காட்டப்பட்டு உள்ளது. 2003ல் கல்லுண்டாய் வெளி எழில் கொஞ்சும் பிரசித்தமான பிரதேசமாக மலரும் எனத்தீர்க்கதரிசனம் கொள்கிறார். அது சாத்தியமாகும். அரசியல், புவியியல், பொருண்மியக் காரணிகளோடு ஒப்பு நோக்கிப் பின்னப்பட்ட 'சாத்திய எதார்த்தக் கதை' இதுவெனலாம்.

சாந்தனிடமிருந்து நிறைய வார்ப்புகளை ஈழத்திலக்கியம் பெற வேண்டும். அத்தகைய சக்தி அவரது கதைகளுக்குண்டு. □□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஈழமும் லங்கையும்

□□ தில்லைச்சிவன் □□

பட்டாளத்தான் செய்ததெல்லாம் மறந்து போகுமா?
பத்துமாதக் கர்ப்பினியின் வயிற்றைக் கீறினான்,
கட்டிவைத்த புருஷன்முன்னே அவன்றன் பெண்டிலைக்
கற்பழித்துச் சாகடித்த கருணை என்னவாம்.
எப்படியும் அவர்கள் செய்யில் குற்றமில்லையாம்
ஏனென்று கேட்பதற்கும் ஆட்களில்லையாம்
அப்பாவித் தமிழரினம் அழிய வேண்டுமாம்
ஆள்வோரின் முட்டையம்மிக் கல்லையுடைக்குமாம்.

தாயைக் கொல்லப் பணித்தவனார்? அவளைக் கொன்றிட
தனையை வெடிகுண்டாக்கினால் தப்பு என்பதா?
நாயைப்போலச் சுட்டுக் கொல்வீர் உங்கள்கால்களை
நக்கிவாழ ரோசமற்ற நாய்என் றெண்ணமா
குழந்தை குட்டி என்றில்லாமல் கொன்றொழிக்கிறாய்
கோவில், பள்ளி, வீடு எல்லாம் செல்லடிக்கிறாய்
இறந்த தெல்லாம் புலிகள் என்றாய் எளியமக்களாம்
எங்களுக்கும் ரோசம்வரும் என்றுணர் வீரே.

பானைபிடித் தாக்குவதும் படைத்துட் காப்பதும்
பத்தினியின் கைகளெனப் பாட்டுச் சொல்லினும்
சேனையொடு செருக்களத்தில் சென்று போரிடச்
செய்யும் பல மறத்திகளின் செய்தி தெரியுமோ

www.tamilarangam.net



ஆனையை அடக்கியஅரி யாத்தை எம்மவள்
அன்றொருத்தி புலியைமுறத் தாலறைந்தனள்
வீணையெடுத் தாளுங் கையே, வேண்டும் போதினில்
விலங்கொடிக்க வெங்களத்தி லாடுங் கண்டியே!

ஒண்டி மண்டி ஒளித்துவந்து குண்டடிக்கிறாய்
ஒன்றறியா ஏழை மக்கள் உயிர்பறிக்கிறாய்
சண்டை யென்றால் மக்களுயிர் போகும் என்கிறாய்
தலைவர் உயிர் அழித்தால் ஏனோ தர்மம் கேட்கிறாய்
அண்டை வீட்டுக் காரராக நாங்கள் வாழலாம்
அடிமைபோல எம்மை ஆக்கும் எண்ணம் மாற்றிடு
பண்டுபோல ஈழம் வாழும், லங்கை வாழலாம்
பரராச சேகரன் நோய் தீர்த்த தில்லையா!

'வெளிச்சம்'
கலை, இலக்கிய சமூக இதழ்

உருவாக்கம்:
ஆசிரியர் குழு

இதழ் அமைப்பு:
இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

ஓவியம்:
தயா

புகைப்படங்கள்:
'பேபி போட்டோ'

புளொக்குகள்:
'அழகன்'
புளொக் தயாரிப்பாளர்கள்

அச்சு:
ம. மரியதாஸ்

வெளியீடு:
விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

9-1-95

# பசுமை ஓராண்டு நிறைவில்....

**பசுமை வேளாண் சேவையில் முதலீடு செய்துள்ளோர்**

| வட்டம் | விவசாயிகள் தொகை | பங்குத்தொகை ரூபா | மொத்த முதலீடு ரூபா |
|---|---|---|---|
| கோப்பாய் | 4000 | 1000 | 4000000 |
| உடுவில் | 2451 | 1000 | 2451000 |
| சண்டிலிப்பாய் | 1250 | ,, | 1250000 |
| சங்கானை | 1101 | ,, | 1101000 |
| கரவெட்டி | 1094 | ,, | 1094000 |
| கைதடி | 0815 | ,, | 0815000 |
| நல்லூர் | 0678 | ,, | 0678000 |
| கொடிகாமம் | 0630 | ,, | 0630000 |
| பருத்தித்துறை | 0514 | ,, | 0514000 |
| சாவகச்சேரி | 0427 | ,, | 0427000 |
| பளை | 0087 | ,, | 0057000 |
| யாழ்ப்பாணம் | 0014 | ,, | 0014000 |
| மொத்தம் | 13061 | 1000 | 13061000 |

**ஓர் ஆண்டில் முதலீட்டாளர்களுக்கு ஆற்றிய சேவையின் பெறுமதி ரூபா 137008617.40**

## இன்றே நீங்களும் முதலீடு செய்து உங்களையும் நாட்டையும் மேம்படுத்திக் கொள்ளுங்கள்

**விவசாயிகளே !**
**உங்கள் வேளாண் தேவைக்கான**

- ☐ உரம்
- ☒ கிருமிநாசினி
- ☐ எரிபொருள்
- ☐ நல்லின விதைகள்
- ☐ தெளிகருவி
- ☐ நீர் இறைக்கும் இயந்திரம்
- ☒ உதிரிப்பாகங்கள்

போன்றவற்றைப் பெற்றுக் கொள்ள

**பசுமை**
**வேளாண் சேவை**

கோப்பாய்
உடுவில்
சண்டிலிப்பாய்
சங்கானை
கரவெட்டி
கைதடி
நல்லூர்
கொடிகாமம்
பருத்தித்துறை
சாவகச்சேரி
பளை
கோண்டாவில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்